பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ரா ம் கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி 21 | வெள்ளிக்கிழமை (04.04.2003) | தொலைபேசி- 2223378 | ஒலி 106

## சதாமின் இறுதி அத்தியாயம் நெருங்குகிறது

# ஈராக் தலை நகரை நோக்கி

# அமெரிக்க படைகள் முன்னேற்றம்

## தற்காலிக அரசை அமைக்கும் முயற்சியும் தீவிரம்

(நமது வெளிநாட்டு செய்திச் சேவை)

**ஈராக்கின் தலை நகர் பாக்தாத்தைக் கைப்பற்றுவதற்கு நான்கு முனைகளூடாக சுற்றி வளைத்துக் கொண்டு அமெரிக்க கூட்டணிப் படைகள் முன்னேறிவருகின்றன.**

**இதேவேளை ஈராக்கிய இராணுவம் உக்கிரமான போரை அமெரிக்க கூட்டணிப் படைகள் மீது தொடுத்துள்ளதுடன் அமெரிக்கப் போர் விமானங்கள் இரண்டை "பேர்ச்சாட" ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தியுள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.**

ஈராக மீது அமெரிக்க கூட்டணிப் படையனர் தாக்குதலை மேற் கொண்ட 15வது நாளான நேற்று கூட்டணிப் படையினர் நான்கு முனைகள் ஊடாக ஈராக் தலை நகர் பாக்தாத்தை நோக்கி முன்னேறி சில மைல் தொலைவில் தரித்து நிற்பதாக கூட்டுப் படைப் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் போர் விமானங்களின் இடை விடாத குண்டு வீச்சுக்கள் பீரங்கித் தாக்குதல்கள் மத்தியில் அமெரிக்க கூட்டுப் படையினர் மீது ஈராக்கியப் படையினர் கடுமையான தாக்குதலை மேற் கொண்டு வருகின்றனர்.

பாக்தாத் நகரைக் கைப்பற்றி அதனையடுத்து பாக்தாத் விமான நிலையத்தைக் கைப்பற்றுவதற்கு இலக்கு வைத்தே அமெரிக்கக் கூட்டுப் படைகள் முன்னேறி வருவதை அடுத்து பாக்தாத் விமான நிலையத்தைச் சுற்றி பல்லாயிரக் கணக்கான ஈராக்கிய குடியரசுப் படைகள் குவிக்கப் பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சர்வாதிகார

(10ம் பக்கம் பார்க்க)



அமெரிக்க கூட்டணிப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் ஈராக்கியத் தாயும் குழந்தையும்.

## அரசு-புலிகள் உடன்படிக்கையை அமுல் படுத்துவது அவசியம்

### தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை பூரணமாக அமுல்படுத்தி அதனை செயற்படுத்துவதன் மூலம் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி சமாதானத்திற்கும அமைதி முயற்சிக்கும் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளலாம் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன். தெரிவித்துள்ளார்.

ஐரிஷ் நாட்டு சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற யோன்கியுவை கிளிநெச்சியில் உள்ள அரசியல் நடுவப் பணியகத்தில் சந்தித்துப் பேசியபின் கருத்துத் தெரிவிக்கையிலேயே சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு

(10ம் பக்கம் பார்க்க)

## சீனப்படகு-லங்கா முடித்த மீது தாக்குதல்

## சமாதான முயற்சியைப் பாதிக்கும்

## கண்காணிப்புக் குழு அறிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடற் பிரதேசத்தில் சீன இழுவைப் படகுகள் தாக்கப்பட்ட சம்பவமும்,திருகோணமலைக் கடற்பரப்பில் இலங்கை இராணுவத்தினர் பயணம் செய்த லங்கா முடித்த கப்பல் தாக்கப்பட்ட சம்பவமும் இலங்கையில தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த உடன்பாடு சமாதான சூழ்நிலை ஆகியவற்றைப் பாதிப்படையச் செய்யும் செயற்பாடுகள் என யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கயில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக் கடலில் சீன மீனவர்களின் இழுவைப் படகு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவும், திருகோணமலை கடற்பரப்பில் இராணுவத்தினர் பயணம் செய்த லங்கா முடித்த கப்பல் தாக்கப்பட்ட சம்பவம்

(10ம் பக்கம் பார்க்க)

## வரதனின் கொலையைக் கண்டித்து நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் வரதன் குழுவின் தலைவர் இனந் தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப் பட்டமைக்கு எதிராக ஆரையம்பதியில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு வர்த்தக நிலையங்களுக்குச் சென்ற வரதன்குழு உறுப்பினர்கள் வர்த்தக நிலையங்களைப் பூட்டுமாறு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அந்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது கடைகளை திறந்த சில வர்த்தகர்கள் நேற்றுக்காலை எச்சரிக்கப்பட்டதுடன் அவர்களது கடைகளும் மூடப்பட்டன.

அத்துடன் வீதித்தடைகளை ஏற்படுத்தி, வீதிகளில் ரயர்களைப்

(10ம் பக்கம் பார்க்க)

## ஆனந்த சங்கரி எம்.பி அவுஸ்ரேலியா பயணம்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் இன்று நடை பெறவுள்ள உலகப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஸ்ட தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி நேற்று அவுஸ்திரேலியா சென்றுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் நடை பெறவுள்ள இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக உலக நாட்டுப் பராளுமன்ற உறுப்பினர்கள் அவுஸ்ரேலியாவில் கூடியுள்ளனர்

இலங்கையில் இருந்து ஆனந்த சங்கரி எம்.பியுடன் உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா, தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோரும் அவுஸ்ரேலியா சென்றுள்ளனர். இ-10,43)

## மின்சாரம் தாக்கியதில் மாணவன் பரிதாப மரணம்

(யாழ்பாணம்)

மின்சாரம் தாக்கியதில் பாடசாலை மாணவர் ஒருவர் நேற்றுக் காலை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

காலை 7 மணியளவில் இடம் பெற்ற இத்துயரச் சம்பவத்தில் மானிப்பாய் பைக்கஸ் வீதியைச் சேர்ந்த இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரியில் உயர் தரம் 2004 கணிதப் பிரிவில் கல்வி பயிலும் மரியதாஸ் பிரதீபன் (வயது18) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

புதிதாக் கட்டப்பட்ட வீட்டின் பிளாற்றில் ஏறி மின்குமிழைப் பொருத்த முற்பட்ட போது மின் ஒழுகில் அகப்பட்டு நிலத்தில் தூக்கி வீசபட்டார்.

உடனடியாக உறவினர்கள் அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்தனர். எனினும் மாணவன் இடைவழியில் மரணமானார். (த-6,7)

### தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பில்

## பிரதமர்-கல்வி அமைச்சரை தமிழ்க் கூட்டமைப்பு சந்தித்தது

(திருநெல்வேலி)

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ் தலமான அலரிமாளிகையில் இச் சந்திப்பு இடம் பெற்றது.

இச் சந்திப்பில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப் படுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர்களின் நியமனத்திற்கு பரீட்சை நடத்தப்படுவது அவசியமற்றது என்றும் எம்.பிக்கள் பிரதமரிடம் வலியுறுத்திக் கூறினர்.

பிரதமருடனான சந்திப்பில் கூட்டமைப்பு எம்.பிக்களான அ.விநாயக மூர்த்தி,இரா.சம்பந்தன்,என்.ரவிராஜ் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், துரைரத்தினசிங்கம்,சிவசக்தி ஆனந்தன்,தங்கவடிவேல்,ஜோசப் பரராஜசிங்கம்,மாவை.சேனாதிராஜா,கிருஸ்ணபிள்ளை

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கட்சியின் நலனுக்காக உழைக்காதவர்கள் அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்

## ஸ்ரீ.சு.க. மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)



பொ.ஐ. முன்னணி ,ஜே.வி.பி யை உள்வாங்கி பரந்த கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பான இறுதி ஆவணம் இவ்வாரம் முடிவுக்குள் தயாரிக கப்பட்டுவிடும் என்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க ஸ்ரீ.ல.சு. கட்சியின் மத்திய குழுவுக்கு அணமைய கூட்டத்தில் அறிவித் துள்ளார்.

ஒப்பந்தம் கைச்சாத்தாகும் முன் னர் அதன் நகல் மத்திய குழு வுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது விடயத்தை மததிய குழு வுக்கும் அறிவித்த ஜனாதிபதி இது வரை நடை பெற்ற பேச்சு வார்த் தைகள் பற்றிய விபரங்களையும் எடுத்து விளக்கியுள்ளார்.

கட்சியை மீள ஒழுங்கு படுத்து வதுதொடர்பான அறிக்கையும் ஜனாதி பதியிடம் பொதுச் செயலாளர் மைத்ரி பால ஸ்ரீ சேனாவினால் கையளிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, கட்சிக்காக திருப் திகரமாக உழைக்காதவர்கள் அமைப்பாளர் பதவிகளிலிருந்து நீக்கப்படுவர் என்றும் கட்சியின் வருடாந்த மாநாடு மே மாதம் நடை பெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

பொ.ஐ. மு யின் மே தினக் கொண் டாட்டங்கள் எங்கே எப்படி கொண் டாடப்பட வேண்டும் என்பது பற்றி உரை யாடப்பட்டதுடன் சில அமைச்சு களில் ஊழல் நடை பெறுவதாக அங்கு பேசப்பட்டதை அடுத்து உரிய நேரம் வரும் போது அவற்றை தான் பொறுப் பேற்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டை விமர்சித்தமைக் காக அத்தனகலை பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் கருணாரத் னவை கட்சியிலிருந்து நீக்குவது என்றும் மத்திய குழு தீர்மானித் துள்ளது. (இ)

## நூலகர் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஆசிரியநூலகர் களுக்கான செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள் ளதாக மாகாண நூலக இணைப் பாளர் ந.ஆனந்தராஜ் தெரிவிததுள் ளார்.

முதல்கட்டமாக வடமராட்சி, தென்மராட்சி வலயங்களில் நூலக அபிவிருத்திக்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து அதிபர் கள் சிபார்சுசெய்து ஆராயப்பட்ட ஆசிரியர்களுக்கானபயிற்சி எதிர் வரும் 19ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## தென்னாபிரிக்க கிரி. அணியில் இளம் வீரர்களுக்கே இடம்

(டர்பன்)

தென்னாபிரிக்க அணியின் இலக் குக்காப்பாளரும் உப தலைவ ருமான மார்க் பௌச்சர் ,தென்னாபிரிக்க கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் அணித் தலைவர் ஷோன் பொலக் பதவி நீக்கப்பட்டு 22 வயதான இளம் வீரர் கிரஹாம் ஸ்மித் புதிய தலைவராக நியமிக் கப்பட்டார்.

தற்போது உப தலைவர் பௌச்சர் பதவி நீக்கப்பட்டு இளம் வீரர் ஒரு வருக்கு வாய்ப்பு வழங்கப்படவுள் ளதாக தென்னாபிரிக்க கிரிகெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் தெரி வித்துள்ளார். தென்னாபிரிக்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சிரேஷ்ட அதிகாரியான ஜெரால்ட் மஜோலா இது பற்றி கருத்துக் கூறுகையில் ,

இளம் வீரர் ஒருவரை உப தலைவராக நியமிக்க நாம் முடிவு செய்துள்ளோம் பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தின் போது புதிய உப தலைவரை நாம் அறிவிப் போம் இளம் வீரர்களின் கூட்டாக உருவாகும் தென்னாபிரிக்க அணி யையே நாம் எதிர் பார்க்கின்றோம் என்றார். (உ_55)



யாழ்ப்பாணத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த யாழ். மாநகரசபை வளாகம் மற்றும் கோட்டைச் சுற்றாடல் பகுதிகளில் படையினரின் முகாம் அமைக்கும் பணி இடை நிறுத்தப்பட்ட பின்... படம் : க.பவன்

## சீன மீன் பிடி படகு மீதான தாக்குதல்

# ஆதாரம் இல்லாது எவர் மீதும் குற்றம் சாட்ட முடியாது

## கண்காணிப்புக்குழு அறிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவு சுண்டிக்குளம் கடற்பரப்பில் கடந்த மாதம் சீன மீன் பிடி படகு ஒன்று தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆதாரம் இல்லாது எவர் மீதும் குற்றஞ்சாட்ட முடியாது

இவ்வாறு இது தொடர்டபான விசாரணை மேற்கொண்ட போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளது.

இவ்வறிக்கையளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இத்தாக்குதலுக்கும் தமக்கும் எது வித தொடர்பும் இல்லை என புலிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மேற்குறித்த பிரதே சத்தில் கடற்படையினர் நிலை கொண் டுள்ள சமயத்தில் கடற்படையினருக்கு தெரியாது எவ்வாறு தாக்குதல் நடந்திருக்கமுடியும் என விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால் மேற்படி தாக்குதல் சம்பவத்தில் தப்பித்தவர்களில் ஒரு சிலர் விடுதலைப்புலிகள் தான் இத் தாக்குதலை நடத்தியதாக கூறுகிறார்கள்

இந் நிலையில் விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடத்தி னார்கள் என்பதை நிரூபிக்கக் கூடிய சான்றுகள் எதுவும் இல்லை.

ஆயினும் இத்தாக்குதல் மிகவும் பாரதூரமான பயங்கரவாத செயல் என்றே கருதுகிறோம்.

அத்துடன் 17பேரை பலிகொண்ட இத்தாக்குதல்கண்டிக்கப்படவேண்டிய விடயம் என்பதுடன் கடற்பரப்பில் நடை பெறும் இது போன்ற சம்பவங்கள் போர் நிறுத்த ஸ்த்திர தன்மையை அச்சுறுத்தலுக்குள்ளாகலாம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம.

எதிர் காலத்தில் இத்தகைய சம்பவங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளைமேற்கொள்வதற்கு கடந்த மாதம் ஜப்பானில் நடை பெற்ற 6வது சுற்றுப் பேச்சில் இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் இணங்கி இருந்தன.

இதற்கமைய இத்தகைய நடவடிக் கைகள் குறித்து பூர்வாங்க யோசனை களை இலங்கை அரசிடமும் விடுதலைப்புலிகளிடமும் அடுத்த வாரம் அளவில் சமர்ப்பிக்கப்படும்.

அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் தவிர்ந்த வேறு ஆயுதக் குழுக்கள் வடக்கு கிழக்கில் இயங்கி வருகின்றன.

அப்பிரதேசங்களில் இயங்கி வரும் வேறு தமிழ்கட்சிகள்மீதோ ஆயுதக்குழுக்கள் மீதோ நாம் இது தொடர்பாக குற்றம் சாட்ட வில்லை எனவும் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் விடப்பட்டுள்ளது.

மேற்படி சீனப்படகு தாக்கப்பட் டமை குறித்த பக்கச்சார்பற்ற விசார ணையைமேற்கொண்ட கண்காணிப்புக்குழு கடந்த 28ஆம் திகதி தனது விசாரணை அறிக் கையை அரசு புலிகள்யிடம் கையளித் திருந்தமை தெரிந்ததே. (உ-10)



யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந் தாட்டப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியினர் வெற்றிக் கேடயத் துடன் காட்சியளிக்கின்றனர். படம்: சுன்னாகம் நிருபர்


## கேள்வி அறிவித்தல்

### புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலத்துறை கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம் திருகோணமலை

1. வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை, கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு கேள்விச் சபைத் தலைவரினால் அச்சுவேலி சுற்றியற் கூறில் வெளிநோயாளர் பிரிவு (கட்டம் I) நிர்மாணிப்பதற்கான கேள்விகள் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை இவ் அமைச்சில் ஏற்றுக் கொள்ளப்பட்டு பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம நிர்மாணிப்பதற்குத் தரம் எம் 7 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 750/= ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டை யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம், அத்துடன் ஏதும் மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிட மிருந்து வேலை நாட்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

புனர்வாழ்வு, புனரமைப்பு,
சமூக நலத்துறை கட்டடங்கள்
மகளிர் விவகார அமைச்சு,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
31.03.2003

கே. மகாலிங்கம்
தலைவர்
அமைச்சு கேள்விச் சபை

(C/5956)


## திருடர் தொல்லை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இரண்டாம் குறுக்குத் தெருப் பகுதியில் திருடர் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதிப் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமையால் இருட்டைப் பயன்படுத்தி திருடர் தமது கைவரி சையைக் காட்டி வருவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-5)







சென்ஜோன்ஸ் மத்திய கல்லூரி அணிகளுக்குக்கிடையிலான இடம்பெற்ற கிரிகெட் போட்டியில் திறைமையாக விளையாடிய வீரர் ஒருவருக்கு அபான்ஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் குலேந்திரன் பரிசுப் பொருள் வழங்குவதையும் அருகில் அபான்ஸ் நிறுவனயாழ். ஏக விநியோகஸ்தரான உஷா ஏஜென்சி உரிமையாளர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்திலும்,திறமையான வீரர்களுக்கு வழங்கப்பட்ட பெறுமதிமிக்க பரிசுப் பொருட்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மெத்தென்ற மௌனம்

பேரானந்த நிலையம்
சொர்க்கம்
4.4.2003

அன்புள்ள நிர்மலா,

சூரியன் யாருக்கும் "பை" சொல்லாமல் மறைந்து போய்விட்ட ஒரு நேரத்தில் இக்கடிதத்தை உனக்கு எழுதுவதற்காக அமர்ந்திருக்கிறேன். என்னிடமிருந்து நீ ஒரு போதும் தபால் ஒன்றை எதிர்பார்த்திருக்க மாட்டாய். இது உனக்கு வியப்பு என்ற நேர் உணர்வைத் தரலாம். தந்தால பரவாயில்லை. ஆனால்கோபம், வெறுப்பு போன்ற மறை உணர்வுகளைத் தந்துவிடக்கூடாது என்ற கவனத்துடனேயே எழுதுகிறேன்.

பூவுலகில் மானிடம் பெரும்பாலும் தவறிப்போயிருக்கிறது என்பது உண்மைததான் ஆயினும் உனக்குள் நான் இடையிடையாவது வந்து போகவேண்டும் என்று விரும்பியிருந்தேன். நீ என்னை முற்றாகவே உன் மனதிலிருந்து அகற்றிவிட்டதாகத் தோன்றுகிறது. உனக்காகப் பரிதாபப் படுவதைவட வேறு எதுவும் செய்யத் தோன்றவில்லை எனக்கு.

ஒருவருடைய தனிப்பட்ட அகராதியிலே அவரது பெயரே முதல் சொல். அதுவே முதன்மைச் சொல் என்றும் சொல்லுவார்கள். எவ்வளவோ தேடுதலுக்கும் எதிர்பார்ப்புக்கும் மத்தியில் உன் பெற்றோர் உனக்கு நிர்மலா என்று பெயர் வைத்திருப்பார்கள். நிர்மலன் இறைவன். நீ மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றிலிருந்து விடுபட்டவளாக வாழ வேண்டும். ஒரு இறை வாழ்வு உனக்கு அமைய வேண்டும் என்று எதிர்பார்த்திருப்பார்கள். அந்த எதிர்பார்ப்பு நிறைவேறியிருந்தால் நான் உன்னுடன் நிரந்தரமாகத் தங்கியிருப்பேனே! உன் மனமே எனக்குப் பிடித்தமான கோயில் ஆகியிருக்குமே! ஆனால்... அது நடக்கவில்லை.

நல்ல உள ஆரோக்கிய முள்ள ஒருவர் ஏனைய மனிதர்களோடு சிறந்த உறவு நிலைகளைப பேணிக் கொள்வார். உன்னைச் சற்றுத் திரும்பிப்பார். வீட்டிலும் சரி வேலைத தளத்திலும் சரி, கடந்த சில வருடங்களில் நீ எத்தனை மனிதர்களோடு பரச்சினைப் பட்டுக் கொண்டாய்? எல்லா மனிதர்களும் தவறு செய்கிறார்கள். நான் மட்டும் சரியாக இருக்கிறேன் என்ற மிகப் போலியான கட்டுக்குள் உன்னை நீயே சிறைப்படுத்திக் கொண்டு அல்லற்படுகிறாய்.

குறிப்பாக வாழ்வில் உனக்கு நேரே மேலே பணி செய்பவர்களில் ஏதோ சில குற்றங்களைக் கண்டு பிடித்துச் சொல்லித் திரிந்தால் நீ அவர்கள் மீது அதிகாரம் செலுத்தலாம் என்று நம்புகிறாய். எல்லோரிடத்தும் அதிகாரம் செலுத்தும் நிலை மிகத் திருப்தி தரும் நிலை போலத்தோன்றும். ஆனால் உண்மையில் அதிகாரப் பசி (**Power hunger**) என்பது ஒரு மனிதனின் ஆளுமையை மிகமோசமாகச் சிதைக்க வல்லது. என்னைக

பெறுவதும் அதுதான். நேரான வழிகளில் முன்னேறித்தம் சுய கணிப்பை உயர்த்திக் கொள்ள முடியாதவர்கள் தான் அதிகாரம் செலுத்தி அதன் மூலம் பெரியவர்களாகிக் கொள்ள முயலுகிறார்கள். நீயும் அப்படியா?

விளக்கு ஏற்றினால்தான் வெளிச்சம வரும் என்பதை உனக்குச் சொல்ல வேண்டிய கடமை எனக்கிருக்கிறது நிர்மலா.

உனது கனவுகள் எப்படி இருக்கின்றன என்றுபார். கனவுகளின் நினைப்பின் அடிவாரத்திலேயே



மனம் கசக்கிறதல்லவா? உனது உள ஆரோக்கிய நிலை படிப்படியாகச் சரிந்து வருவதற்கான சுட்டி தான. அது. உன்னை நீயே காப்பாற்றிக் கொள்ளாவிட்டால் வேறு யாரும் உனக்கு உதவப் போவதில்லை.

நீ பல பாடசாலைகளில் ஆசிரியராக இருந்தாய். ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்த அதிபர்களைப் பற்றிப் பல குறைகளைச் சொல்லித்திரிந்தாய். ஒரு அதிபருடைய ஒழுக்கம் தவறானது என்றாய். ஒரு அதிபர் ஒரு போதும் நேரத்திற்கு வருவதில்லை என்றாய். மற்றறொருவர் மாணவரிடையே பாகுபாடு காட்டுபவர் என்றாய். இன்னொருவர். பாடசாலை நேரத்தில் மாணவர்களை வேறு வேலைகளுக்கு அனுப்பி உன்னைக் கற்பிக்க விடாமல் தடை செய்கிறார் என்று சொன்னாய். ஒரு கை தட்டி ஒருபோதும் சத்தம் வருவதில்லைச் சகோதரி! மற்றக்கை குறைந்த பட்சம் ஒரு கையின் பாதைக்குக் குறுக்கேயாவது நின்றிருக்க வேண்டும். நீ ஒரு கையா? மற்றக்கையா? அல்லது கையேயில்லையா?

ஒருவர் ஒழுக்கத்தில் தவறியவர் என்பதை நாம் பலருக்குச் சொல்லித் திரிவதன் மூலம் நாம் ஒழுக்க சீலர்கள் ஆகிவிடமுடியாது தோழி! நாம் ஒழுக்க சீலர்கள்

சொல்லும்படி நடந்து காட்டுவதே திறமை. ஒருவர் நேரத்துக்கு வரவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக மட்டும் நாம் நேரத்துக்கு வேலைக்குப் போவது முட்டாள்தனம். எப்போதும் எங்கும நேரத்திற்கு நிற்கும் பண்பு எமது ஆளுமையில் நிரந்தரமாக வந்து வட்டால் அது சிறப்புத்தான். நீ நேரம பிந்திப் போன நாள்கள் அல்லது நேரத்திற்கு முந்திப் பாடசாலையை விட்டுப் போன நாள்கள் இல்லைத் தானா? ஒருவருக்கும் தெரியாமல் இடையில் வங்கிக்குப் போன

நாள்களைப் பற்றி என்ன சொல்கிறாய்? மற்றவரது முகத்தின் புண்ணைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் எமது முதுகின் புண்ணை மறைத்துவிட முடியுமா? அது எமக்குத் தெரியாவிட்டாலும் மற்றவர்களுக்குத் தெரியும் நிர்மலா,

ஆரம்பத்தில் மற்றவர்களிடம் இருக்கும் குறையைப் பெரிதுபடுத்திப் பேசி வந்த நீ இப்போதெல்லாம் முற்றிலும் இல்லாத விடயங்களைப் பேச ஆரம்பித்திருக்கிறாய், நெருப்பில்லாமலே புகையை உருவாக்குகிறது உன் நாக்கு. கடித்த பற்களிடை-சொல்லத்தகாத வார்த்தைகள் உன் நாக்கு நுனியில் எப்போதும் தகித்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவு துணிச்சலாக வார்த்தைகள் எப்படி உன் பல்லைத் தாண்டுகின்றன? அந்த வார்த்தைகளால் பலர் புண்பட்டுப் போவது உன்னையறியாமலே உனக்குள் ஒரு மகிழ்வை ஏற்படுத்துகிறதா? இன்னொரு மனிதனின் துன்பம் எமக்குள் மகிழ்வை ஏற்படுத்தும் நிலை ஒரு நோய் நிலை என்பது உனக்குத் தெரியுமா? இது மாதிரிக கடிவாளம் தெறிக்கும் சந்தர்ப்பங்கள் தான் வாழ்க்கையின் திருப்பங்கள். அவை அநேகமாக மோசமான திருப்பங்களாகத்தான் இருக்கும்.

உனது முகமும் வாயும் கடுகடு-கிடுகிடு என்று இருப்பதைப் பார்க்கு

விடை பெற்றுக் கொண்டேனே ஒழிய எனக்கு உன்னிடம் கோபம் இல்லை. இரக்கமும் ஒத்துணர்வுமே அதிகம் உண்டு.

மயிர் நரைத்துப் போன மத்திய வயதிற்கு வந்தும் வாழ்வின் பச்சையைக் காண முடியாத உன் சோகம் எனக்குப் புரியும். அது உன் நியதியாயிற்று. நியதி எனக்கு உனக்கென்று இரக்கம் பாராமல் தனக்கே இரக்கம் பார்க்க இயலாது தன்னைத் தானே துரத்திக் கொண்டு வருகிறது. உன் விழிகள் அன்பைத் தேடும் பிச்சைப் பாத்திரங்களாய்ஆகி நிற்பது எனக்குத் தெரியும். உனக்கென்று ஒரு வாழ்வு அமையாமல் போனதும, குழந்தை ஒன்றைத் தூக்கிக் கொஞ்ச முடியாத நிலையும் மத்திய வயதின் இரு பெரும் நெருக்கடி நிலைகள் என்று உணருகிறேன். ஆனாலும் அதனைத் தீர்க் கும் வழி இதுவல்லவே தோழி!

திருமணமான பெண்கள் அனைவரிலும் ஒரு குறையைத் தேடிப் பிடித்துச் சொல்லி விடுவது உன் நியதிக்கு மருந்தாகிவிடாது. குழந்தைகள் உன் வயிற்றில் வரவில்லை என்பதற்காகக் குழந்தைகளை அடித்து நொருக்கி விடுவது•புதுருக்கான விடை இல்லை.

மௌனம் என்றொரு அற்புதமான அங்கி இருக்கிறது. என்ன விலை கொடுத்தும அதை வாங்கிப போர்த்துக் கொள் நிர்மலா. அதன பின் என்னை ரெலிபோனிலாவது கூப்பிட முடியும். ஏராளமான மறை உணர்வுகள் உன் மனதில் வந்து முழக்க மிட்டுக் குழப்பும் காட்சி எனக்குத் தெரிகிறது. அவற்றை உன்னதமான கலை வடிவங்களாக வெளிக் கொணர்ந்தால் உனக்கும் ஆறுதல் உலகுக்கும் பயன். செய்வாயா? செய்வாயா என்று கேட்பதென்ன? செய்யத்தான் வேண்டும். இல்லையானால் உளநலமின்மை தொடர்பான உனது பயணம் விரைவு படுத்தப் படும். அப்படி இல்லை என்று மறுத்தலிக்க முனையாதே. நீ மிக ஏராளமாகப பொய் சொல்லத் தொடங்கியிருக்கிறாய் பார் - அதுவே உன் உள ஆரோக்கியக குறைவுக்கான சுடடி. நீ தெல்லிப்பழைக்குப் போக விரும்ப மாட்டாய் என்று நம்பு கிறேன்.

கலை வடிவங்களை உருவாக்க உன்னால் முடியாவிட்டால் கூடப் பரவாயில்லை என்னை அழைக்க வேறு பல வழிகளும் உள்ளன. அவற்றையும் நீ முயலலாம். நான் உன்னிடம் இடையிடையாவதுவந்து போனால் உன் மனதில் நட்சத்திரங்களும் பிறைத்துண்டுகளும் பூக்கும்.

உனது நுரையீரலில் எத்தனை சற்றறைகளைச் சும்மா வைத்திருக்கிறாய்? அவற்றைக் கொஞ்சம் ஒட்சிசனால் நிரப்பினால் என்ன குறைந்து போகும்? நல்ல காற்றுள்ள ஒரு பூந்தோட்டத்தில் நின்று அழ மூச்செடுத்து விட்டுப் பார். நான் உனக்கருகில் எட்டிப் பார்ப்பேன். உன் மனதிற்குக் கொஞ்சம் சுடு தண்ணீர் ஒத்தடமும் கொடுப்பேன்.

## வெள்ளி முற்றம்

யாரிடத்தில் என்ன குற்றம் கண்டு அதை யாரிடம் போய்சொல்லி அவர்களை நம்பவைக்கலாம் என்ற யோசனையில் நீ உளுத்துப் போனால் உன் உடல் எருவுக்கும் உதவாது. அதைவிட மற்றவருக்கு எப்படி ஒரு மகிழ்ச்சியைத் தரளாம் என்ற சிந்தனையை நீ உச்சாடனம் செய்தால் ஒரு இனிய பாடல் சிறைகைவிரித்துக் கொண்டு உன் நெஞ்சை மிதித்துக் கொண்டு உனக்குள் பறக்கும்.

திருமணமான பெண்கள் தம் கணவரோடு மகிழ்வாக இருப்பார்கள் என்ற நினைவு உனனை சரிப்பதால், அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம் என்று சிந்தித்துச் சிந்தித்துச் சிதறிப் போகாதே. ஒரு தீபத்துக்கு முன்னே மண்டியிட்டு அமர்ந்து கொள். அதையே தொடர்ந்து பார்த்துக் கொண்டிரு. கண் மடல்கள் களைத்துப் போக, தீப ஒளியை மனக்கண்ணுக்கு மாற்றிப் புறக்கண்ணை மூடிக்கொள். இத்தீபத்தினூடே எல்லாம் வல்ல இறைவனுக்கும் உனக்கும் ஒரு இறுக்கமான தொடர்பை ஏற்படுத்திக கொள். "அன்னவரே எங்கணவர் ஆவார்" என்று ஏற்றுக்கொள். இறைவன் உனக்குள் ஒளியாக நின்று எப்போதும் உன் துணைவராக நின்று உன்னை வழி நடத்துவதாக நம்பு. அப்போது நான் உனக்குப் பக்கத்தில் வந்து படுத்தே விடுவேன். அதன் பிறகு, பனி மூட்டம் பெய்கிற காலையானாலும், இளம் ஒளிவிழுதுகள் இறங்குகிற மாலையானாலும், மழையானாலும் புயலானாலும் எல்லா நேரங்களிலும் சிரிக்க முடியும் உன்னால!

**கோகிலா மகேந்திரன்**

சந்தனச் சேற்றில் நீ புதையுண்டு போகவேண்டும் என்பதுதான் என் உளமார்ந்த விருப்பம் நிர்மி!

உனக்கும் உஷத் கால மேகங்களுக்கும் இடையே ஒரு சௌந்தர்யமான பாதை உருவாகவேண்டும். இரவு முழுவதும் வானம் கடலுக்கு முத்தம் கொடுத்துக் காலையில் ஓய்நதிருப்பது உனக்குப் புலனாக வேண்டும். நாகரிகம் உட்கார்ந்து அசை போட்டுக் கொண்டிருக்கும் இடங்களுக்கு நீ போக வேண்டியதில்லை.

இனிச் சொல்லப் போவது இரகசியம் நிர்மிக்குஞ்சு! பிறகு... பறகு... நான் உன்னை ஒரு கணமும் விட்டுப் பிரிய மாட்டேனாம்.... சரியா!

அதன் பிறகு மௌனம... எமக்குள் மிக மிக நீண்ட... மெத்தென்ற மௌனம்!

அன்புள்ள
சாந்தி

தரும் நிலை போலத்தோன்றும். ஆனால் உண்மையில் அதிகாரப் பசி (Power hunger) என்பது ஒரு மனிதனின் ஆளுமையை மிகமோசமாகச் சிதைக்க வல்லது. என்னைக லைப்பதிலே முதலிடம்

ஒருவர் ஒழுக்கத்தில் தவறியவர் என்பதை நாம் பலருக்குச் சொல்லித் திரிவதன் மூலம் நாம் ஒழுக்க சீலர்கள் ஆகிவிடமுடியாது தோழி! நாம் ஒழுக்க சீலர்கள் என்பதை மற்றைய மனிதர்கள்

பங்கள் தான் வாழ்க்கையின் திருப்பங்கள். அவை அநேகமாக மோசமான திருப்பங்களாகத்தான் இருக்கும்.

உனது முகமும் வாயும் கடுகடு-சிடுசிடு என்று இருப்பதைப் பார்த்து நான் உன்னிடம் சொல்லாமலே

# காணாமல் போனோர் விசாரணை உறவினர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த 1996, 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள, பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரையின் படி குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் நிசந்த பெரேரா தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இக்குழுவினர் கடந்த 3,4ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தமது விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

நாளை சனிக்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் இவ் விசாரணைகளை இவர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.




வடபிராந்திய போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போவிற்கு மத்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் எஸ். பாருக், உயரதிகாரிகளுடன் சென்று டிப்போவின் பிரிவுகளைப் பார்வையிட்டு ஊழியர்களுடன் கலந்துரையாடுவதையும், அங்கு நடைபெற்ற கூட்டத்திற்கு பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் எஸ். கமலநாதன் தலைமைதாங்கி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

விசாரணைக்கு சமூக மளிக்கும் முறைப்பாட்டுக்காரர்களை, பொலிஸ் முறைப்பாட்டு பிரதி, காணாமல் போனவரின் நிழற்படம், இறப்புச்'சான்றிதழ் என்பவற்றைக் கொண்டுவருமாறும், முறைப்பாட்டுககாரரர்கள் அல்லது சாட்சிகள் வெளிநாடு சென்றிருந்தால் உறவினர் அது தொடர்பாக விசாரணைக்குழுவுக்கு அறிவிக்குமாறு பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இடம்பெறவுள்ள விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், விபரம் வருமாறு,

'அருளானந்தம் உதயகுமார் இல 34, 3ஆம் குறுக்குத் தெரு, அராலி வீதி, மானிப்பாய் (கோவை இல: 39)

தேவேந்திரன் ஆனந்தராசா சாவல்காடு சுதுமலை தெற்கு, மானிப்பாய் (கோவை இல: 696)

கந்தசாமி நந்தனசந்திரா அளவெட்டி கிழக்கு மானிப்பாய் (கோவை இல : 176)

சிவலிங்கம், சசிதரன் இல. 687/24, ஒட்டிசுட்டான் வீதி, மானிப்பாய் (கோவை இல : 596) (உ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள்

**1. நுண்கலை மாணி (சங்கீதம்) ~ 2000**

**1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட பரீட்சைகள்**

**2. நுண்கலை மாணி (நாட்டியம்) ~ 2000**

**1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட பரீட்சைகள்**

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 50/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி, விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் மக்கள் வங்கி, யாழ். பல்கலைக் கழகக்கிளை **கணக்கு இலக்கம்-90503** இல் ரூபா 50/= செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டை சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீள்தபால் உறையுடன் **உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 25.04.2003 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**புதிய கட்டண விபரம் :** முதன் முறை பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான கட்டணம் ரூபா 1000/= ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா 200/=

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

(C/5960)

**பதிவாளர்.**

# கூட்டுப்படைகளின் மேலும் ஒரு விமானம் ஈராக்கியரால் சுட்டு வீழ்த்தப்பட்டது

## யு.எஸ்.ஹெலியும் நாசம், படை நகர்வு தொடர்கிறது

(கட்டார்)

**ஈராக்கின் தலைநகர் பக்தாத்தை தாக்கக்கூடிய தூரத்திற்கு முன்னேறி விட்டதாக அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படைகள் கூறிக் கொள்ளும் அதேசமயம் அமெரிக்கா மற்றொரு போர் விமானத்தை இழந்துள்ளது.**

**தென்ஈராக்கில் எவ் 18 சி ரக தனி இருக்கை போர் விமானம் ஒன்று ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. இந்த விமானம் வளைகுடாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்காவின் கிற்றிஹொக் விமானந்தாங்கிக் கப்பலில் இருந்து புறப்பட்ட போதே சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

**29 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த விமானம் யுத்த விமானமாகவும், குண்டு வீச்சு விமானமாகவும் பயன்படுத்தக் கூடியது என்றும் இந்த விமானம் பலதடவைகள் ஈராக் தலைநகர் பக்தாத் மீது முன்னர் குண்டு வீச்சுக்களை நடத்தி வந்ததாகவும் கூறப்படுகின்றது.**

**இதேவேளை, அமெரிக்க இராணுவத்திற்கும் ஈராக் துருப்புக்களுக்குமிடையே கடும் சண்டை நிகழும் ஹர்பாலாவில் 6 இராணுவ வீரர்களுடன் அமெரிக்காவுக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று வீழ்ந்து நொறுங்கியுள்ளது.**

இந்த விபத்துக்கான காரணமும் அதில் இருந்த வீரர்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறை கூறுகின்றது. பக்தாத்தின் மையப்பகுதி மீது அமெரிக்க விமானங்கள் கடுமையாக குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளன.

யூப்பிரட்டிஸ் நதியின் மீதான பாலத்தை மீண்டும் கைப்பற்ற ஈராக்கிய படைகள் மேற்கொண்ட தாக்குதல்களை அமெரிக்கப் படைகள் முறியடித்து விட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் நேற்று முன்தினம் இப்பாலத்தைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் பாலம் கைப்பற்றப்படவில்லையென ஈராக்கியர் கூறியிருந்தனர்.

ஹர்பாலா நகருக்கும் ஒரு ஏரிக்குமிடையிலான ஒரு குறுக்கு வழியைப் பயன்படுத்தி கூட்டுப்படைகள் ஈராக் நோக்கி முன்னேறியிருப்பதாக செய்திகள கூறின.

இதற்கிடையில் ஈராக் வழியாக கூட்டுப்படைகளுக்கான பெருந்தொகையான உணவுப் பொருள் நகர்த்தப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர்.

அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படைகளுடன் சேர வேண்டாம் என்று ஈராக்கிய தலைவர் பலஸ்தீன மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஐரோப்பிய யூனியன் மற்றும் நேட்டோ வெளியுறவு அமைச்சர்களுடன் விவாதிக்க அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் பிறஸல்ஸ் சென்றடைந்துள்ளார். (பி-2)

## சார்ஸ் நோய் மேலும் பரவுகிறது பலியானோர் 80 ஆக உயர்வு

(பெய்ஜிங்)

சீனாவில் இருந்து ஹொங்கொங்கிற்கு பரவிய சார்ஸ் என்னும் நுண்ணுயிரியால் பரவும் மூச்சுத் திணறல் நோயால் பாதிக்கப்பட்டு உலகம் முழுவதும் உயிரிழந்தோர் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது!

ஹொங்கொங்கில் மட்டும் 610 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சீனா, ஹொங்கொங், வியட்நாம், சிங்கப்பூர், கனடா, அமெரிக்கா உள்ளிட்ட 15 நாடுகளுக்கு மளமளவென பரவிவிட்ட இந்த நுண்ணுயிரியால் பாதிக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கை 1,800 ஆக உயர்ந்துள்ளது.

ஹொங்கொங்கில் உள்ள அமோய் கார்டன்ஸ் எனும் குடியிருப்புப் பகுதியில் மட்டும் சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 185 ஆக உயர்ந்துள்ளதை அடுத்து அந்தக் குடியிருப்புப் பகுதியில் இருந்து வெளியே வர ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை. மருத்துவ வசதிகள் குடியிருப்புப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று அளிக்கப்படுகின்றன.

ஹொங்கொங்கில் மட்டும் நேற்று முன்தினம் 2 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்று மேலும் ஒருவர் உயிரிழந்தார். இத்துடன் சேர்ந்து இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளனர். இரண்டு நாட்களில மட்டும் புதிதாக பாதிக்கப்பட்ட 155 பேர்மருத்துவமனைகளில்அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பி)

## கன்னியா குமரிக் கடலில் தாய்வான் படகு பிடிபட்டது

(புதுடில்லி)

கன்னியாகுமரி கடற்பரப்பில் வைத்து தாய்வான் நாட்டு மீன்பிடிப் படகு ஒன்று கைப்பற்றப்பட்டது. அதில் இருந்த 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 10 பேர் தாய்வானைச் சேர்ந்தவர்கள் என்றும், 9 பேர் சீனர்கள் என்றும், மற்றொருவர் இந்தியர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் கன்னியாகுமரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

கன்னியாகுமரி கடற்பரப்பில் இருந்து சுமார் 40 கடல்மைல் தொலைவில் வெளிநாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் இவர்கள் அந்த எல்லையை மீறியுள்ள தாலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். (பி-2)

## ஐஸ்வர்யா விபத்தில் சிக்கிபடுகாயமுற்றார்



படப்பிடிப்பு ஒன்றின்போது ஏற்பட்ட விபத்தில் சிக்கி உலக அழகியும் நடிகையுமான ஐஸ்வர்யா ராய் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றைய தினம் மாலை மகாராஷ்டிரா மாநிலம் நாஷிக் அருகேயுள்ள திரிம்பா கேஷ்வர் என்ற இடத்தில் சினிமா படப்பிடிப்பு இடம்பெற்றது.

படப்பிடிப்பின் போது பயன்படுத்தப்பட்ட ஒரு ஜீப் எதிர்பாராத விதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் சிக்கி ஐஸ்வர்யா ராய் படுகாயமடைந்தார்.

பலத்த காயங்களுடன் இவர் அங்குள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து விமானம் மூலம் மும்பாய்க்கு கொண்டு வரப்பட்டு இந்துஜா மருத்துவமனையில் அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. (பி-2)

## தென்பகுதி நோக்கி குடியரசு அணிகள் பெருமளவில் நகர்வு

(கட்டார்)

முன்னேறிக் கொண்டிருக்கும் அமெரிக்கப் படைகளிடமிருந்து பக்தாத்தை தற்காப்பதற்காக குடியரசு காவல் அணிகள் தென்பகுதி நோக்கி நகர்ந்துள்ளதாக போர் முனைச் செய்திகள் கூறுகின்றன.

வியாழன் அதிகாலையில் இப்படைகள் தெற்கு நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை அமெரிக்க வேவு விமானங்கள் கண்டுள்ளன.

தென் பக்தாத்தில் யூப்பிரட்டிஸ் நதிக்கு மேலாகவுள்ள பாலம் ஒன்றை மீளக் கைப்பற்றுவதற்காக ஈராக்கியர் நடத்திய தாக்குதல் ஒன்றை முறியடித்து விட்டதாக அமெரிக்கர் அறிவித்துள்ளனர்.

### ஹெலி வீழ்த்தப்பட்டது

தென் ஈராக்கில் கர்பாலா என்ற இடத்தில் அமெரிக்க பிளக்ஹாக் ஹெலி கொப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டிருப்பதாக பென்டகன் ஒப்புக்கொண்டுள்ளது. ஹெலியில் இருந்தவர்களில் குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 4 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

புதன்கிழமையன்று அமெரிக்க காலாட் படைகள் பக்தாத்திற்கு 32 கி.மீ. (20மைல்) தூரத்தில் நிலை கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்கரின் வெற்றிகள் பற்றிய அறிவித்தல்களை வெறும் "பொய்கள்" என்று ஈராக்கியர் அறிவித்துள்ளனர்.

ஈராக்கில் அல்ஜஸீரா தொலைக் காட்சிக்காகப் பணிபுரியும் இரு ஊடகவியலாளர்களை ஈராக்கிய தகவல் அமைச்சு தடை செய்திருப்பதையடுத்து அங்கு பணிபுரியும் நிருபர்கள் அனைவரது பணிகளையும் நிறுத்திவிடப் போவதாக அல் ஜஸீரா அறிவித்துள்ளது.

### நஸீரியாவில் கூட்டுப்படை

ஈராக்கின் தென்பகுதி நகரான நஸீரியாவின் பெரும் பாலான பகுதி கூட்டுப்படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

ஈராக்கிய தொலைக்காட்சியில் அதிபர் சதாம் ஹுசைனின் படம் காட்டப்பட்டது. அமைச்சருடன் அமர்ந்திருந்து உரையாற்றுவதையும் சிரிப்பதையும் காணமுடிந்தது. இந்தபடம் எப்பொழுது எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

### நிருபர்கள் கருத்து

முன்னேறும் கூட்டுப்படைகளுடன் சென்றுகொண்டிருக்கும் நிருபர்கள் படை நகர்வு வேகமாக இருப்பதாகவும் எதிர்ப்புக்கள் பலமாக இருக்கவில்லை என்றும் கூறினர்.

சதாம் ஹுசைனின் சிறப்பு அணியான மெரீனா பிரிவு காவல் படைகளை தோற்கடித்து விட்டதாக அமெரிக்க 3வது காலாட் பிரிவின் வீரர்கள் கருதுகின்றார்கள். அதே சமயம் அவர்களில் சிலர் பக்தாத்துக்கு பின்வாங்கியிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

பக்தாத் நகர வீதிகளில் சண்டை செய்வதை கூட்டுப்படையினர் விரும்பவில்லை. பொதுமக்களுக்கு பாதிப்புக்கள் அதிகம் ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது. (பி)

## ஈராக் இராணுவ அதிகாரியுடன் 5 பேர் பிடிபட்டனர்

(லண்டன்)

ஈராக்கின் பஸ்ரா புறநகர்ப் பகுதியில் பிரிட்டன் நாட்டு கமாண்டோ படையினர் நடத்திய தாக்குதலின் போது ஈராக் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் உட்பட ஐந்து பேரை பிரிட்டன் அதிகாரிகள் பிடித்து வைத்துள்ளனர்.

இத்தகவலை பிரிட்டன் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக் குடியரசு படையின் கர்னல் ஒருவர் அபுஅல் காசிம் என்ற கிராமத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். தற்போது பிரிட்டன் கமாண்டோ படையினர் இந்தக் கிராமத்தின் மையப் பகுதிக்குள் நுழைந்து தீவிர சண்டையில் ஈடுபட்டிருப்பதாக தெரிகிறது.

இராணுவ உயரதிகாரிகள் தவிர ஈராக் வீரர்கள் 30 பேர் கொல்லப்பட்டதாகவும், மேலும் 30 பேர் தங்களின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருப்பதாகவும் பிரிட்டன் இராணுவ அதிகாரி குறிப்பிட்டார்.

ஈராக்கில் அவர்களுக்கு எந்தவித எதிர்காலமும் இல்லை என்பதாலும் சட்ட விரோத குற்றச் செயல்களில் ஈடுபட்டதாலும் அவர்களை பிடித்து வைத்திருப்பதாக இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி பி.பி.ஸி செய்தி தெரிவித்தது.

தற்போது தாக்குதலின் அடுத்த கட்டத்திற்கு தயாராகி வருவதாக பிரிட்டன் வெளியுறவுத் துறை ஜூனியர் அமைச்சர் கருத்து தெரிவித்துள்ளார். தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவாக சென்றுகொண்டிருப்பதாகவும், போர் குறித்த திட்டத்தை வகுத்து அதனடிப்படையில் முன்னேறி வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (பி)



அமெரிக்க படை அணி ஒன்றின் மீது ஈராக்கியர் பதுங்கியிருந்து தாக்கியபோது திருப்பித் தாக்கப்பட்ட கார் ஒன்று மோதி சேதத்திற்குள்ளானது



ஈராக்கை நோக்கி அணிவகுத்துச் செல்லும் அமெரிக்க-பிரிட்டிஷ் படைகளின் டாங்கிகளைப் படத்தில் காணலாம்



ஈராக் ஏவிய ஏவுகணையொன்று அமெரிக்க இராணுவத்தினரின் ஆயுதக் குவியல் மீது வீழ்ந்து வெடிக்கும் காட்சி

# சமாதான முயற்சிகள் தொடர்பில் பொதுஜனஅபிப்பிராயவாக்கெடுப்பு

## அரசாங்கம் நடவடிக்கை

## அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

**சமாதான முயற்சிகள் தொடர்பாக கருத்துக் கணிப்பொன்றினை அடுத்த மாதமளவில் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

**நேற்று கொழும்பில் உள்ள அரசாங்க ஊடகத்தகவல் மையத்தில் நடைபெற்ற அமைச்சர்களின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில், சர்வமதத் தலைவர்கள் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்வி அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் யோசனைகளை ஏற்று மக்களின் கருத்துக்களை நேரடியாக அறிந்து கொள்வதற்காக வெகுஜன அபிப்பிராய வாக்கெடுப்புக்களை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற் கொண்டு வருகின்றது.

இதுவரை நடந்த சமாதான முயற்சிகள் பற்றிய விடயங்களையும் இறுதி அரசியல் தீர்வை அடைவதற்கான யோசனைகளையும் உள்ளடக்கிய சமாதான கட்டளைச் சட்டமூலம் ஒன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதற்கு முன்னர் மக்கள் கருத்துக் கணிப்பொன்றினை நடத்துவது உசிதமானது என கல்விமான்கள் கருதுகின்றனர்.

இதன் மூலம் சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்த முடியும் என்று கருதுகிறேன். இது அரசியல் யாப்பின் நிர்ப்பந்தங்கள் இல்லாத கருத்துக் கணிப்பாகும் என்றார்.

அத்துடன், தென்ஆபிரிக்காவில் சமாதான முயற்சிகள் வெற்றி பெறுவதற்கும் இது போன்ற கருத்துக் கணிப்புக்கள், உறுதுணையாக அமைந்தது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

மேலும் கூறுகையில, சமாதான முயற்சிகளுக்கும் இதுவரை நடந்த பேச்சுக்களின் முன்னேற்றத்திற்கும் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் பட்சத்தில் அனைத்து நடைமுறைகளையும் மீள்பரிசீலனை செய்ய அரசு நிர்ப்பந்திக்கப்படும்.

இதேவேளை, அரசிற்கும்-தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான 7ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மே மாதம் 2ஆம் திகதிவரை தாய்லாந்தில் நடைபெறும். அதன் பின்னரே இக்கருத்துக்கணிப்பு நடைபெறும்.

அத்துடன்,இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் யூன் மாதம் 7ஆம் திகதி நடைபெறவிருப்பதால், 7ஆம் திகதி சுற்றுப் பேச்சுவார்த்தை மிகவும் முக்கியத்துவம் பெறும்.

உதவி வ்ழங்கும் மாநாட்டில் இலங்கைக்கு பெருமளவு அடிப்படை நிதி உதவிகள் கிடைக்குமென நம்பப்படுகிறது.

ஈராக்கில் யுத்தம் ஏற்பட்டுள்ள போதும் இலங்கையில் நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகள் தொடரும். இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினை தொடர்பாக 7ஆம சுற்றுப் பேச்சில் ஆராயப்படவுள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் மே மாதத்தில் இரு சட்டவரைபுகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.



இந்நிலையில், இடம்பெயர்ந்தவர்களின் நிலையை நேரில் கண்டறிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் யாழ்ப்பாணத்திற்கு செல்லவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (உ-10)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேசசெயலர் பிரிவின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு உதவி பிரதேச செயலர் க.பீதாம்பரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி ஏ.எவ.ஜே.ரூபசிங்கம் வலிவடக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் ரமணன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-7)

## சிறைச்சாலை ஆணையாளர் நியமன இழுபறிக்குத் தீர்வு

(கொழும்பு)

முன்னாள் மஜிஸ்திரேட் றோனி மஸ்யோக் சிறைச்சாலை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் இந்நியமனம் குறித்த முன்மொழிதலை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இதேசமயம், அண்மையில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிற்கும் இடையில் மேற்படி சிறைச்சாலை ஆணையாளரை நியமிப்பதில் இழுபறி நிலை தோன்றியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## 11வது தேசிய பயிற்சிப் பாசறை 10ஆம் திகதி ஆரம்பம்

(சுதுமலை)

யாழ். மாவட்ட மக்கள் நலன் புரிச் சங்கமும் விசேட படையணிகளும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடாத்தும் 11 வது தேசிய பயிற்சிப் பாசறை எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக் கிழமை தொடக்கம் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத்தேசிய பாசறையில் இம்முறை யாழ்.மாவட்டத்தில் உள்ள 38 பாடசாலைகளைச் சேர்ந்த 450 மாணவர்கள் பங்கேற்கவுள்ளதாக மேற்படி சங்கத்தின் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

இப்பாசறை நிகழ்வில் ஆரம்ப நிகழ்வான அணிகளிற்கு இடையிலான விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளது. மேலும் பாசறை அமைத்தல், பாலம், சிகரம் அமைத்தல், உடற்பயிற்சி, திசையறிதல், வீதி ஒழுங்கு, முதலுதவி மற்றும் தீப் பாசறை போன்ற நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (உ-252)

## இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தை ஸ்ரீலங்கா பிஸ்லறி நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேற்படி காப்புறுதி ஸ்தாபனத்தை கொள்வனவு செய்வதற்காக அரசால் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கும் மேலதிகமாக 60 கோடி ரூபாவை செலுத்த அந்நிறுவனம் இணங்கியுள்ளது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனங்களைச் சிறப்பாக வழி நடத்தி பொருளாதார அபிவிருத்தி நடை மொறகொட இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

கடந்த 10 வருடங்களாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் லாபம் ஈட்டி வருகின்ற போதும் அதன் பங்குகளின் பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேசமயம், மேற்படி நிறுவனத்திடம் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தை ஒப்படைப்பதற்கு அமைச்சர்களும், பிரதமரும் அங்கீகரித்துள்ள நிலையில் ஜனாதிபதி இதற்கு கொள்கையளவில் உடன்படப் போவதில்லை எனக் கூறியுள்ளார். (உ-10)

## அறநெறிப் பாடசாலை

## மாணவர்களுக்கிடையிலான

## புதிய இடத்தைத் தெரிவு செய்ய

## பாதுகாப்பு அமைச்சரின்

# மாணவர்களுக்கிடையிலான போட்டிகளின் முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவா களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**பேச்சுப் போட்டி**

1ஆம்இடம்:க.லதீகரன்-யாழ்ப்பாணம இந்துக் கல்லூரி
2ஆம்இடம்:க.உஷாந்தன்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
3ஆம்இடம் சி.தர்சிகா-மானி.மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

**சிறுகதைப் போட்டி**

1ஆம்இடம்:சீ.பாலரமணன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி
2ஆம்இடம்:நா.கண்ணன்- நவாலி மகாவித்தியாலயம்
3ஆம்இடம்: வி.பிரணவி- சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, ச.அனுலக்ஷன்- சோதி வேம்படி வித்தியாசாலை,கி.ரமேசன்- சோதி வேம்படி வித்தியாசாலை

**கவிதைப் போட்டி**

1ஆம்இடம்: ஜெ.மதுரா-உடுவில் மகளிர் கல்லூரி
2ஆம்இடம்:சி.நிரோஜா- மானி.மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
3ஆம்இடம்:பொ.நிரோஜன்- கொக்குவில் இந்துக் க்ல்லூரி

**கட்டுரைப் போட்டி**

1ஆம்இடம்:சி.கௌசிகன்-யாழ். மத்திய கல்லூரி
2ஆம்இடம்:க.யஸ்மிலா-வேம்படி மகளிர் கல்லூரி
3ஆம்இடம்:சி.நவநீதா-மானிப்பாய் மகளிர் கல்லூரி,ஸ்ரீ.பவித்திரா- சோதி வேம்படி வித்தியாசாலை

**பண்ணிசைப் போட்டி**

1ஆம்இடம்:ஜெ.வைஷ்ணவி- மானி. மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
2ஆம்இடம்:க.அருள்மதி-உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை
3ஆம்இடம்:சி.கோமளதரன்- யாழ்.இந்துக் கல்லூரி,அ.பிரியங்கா- உடுவில் மகளிர் கல்லூரி

இம் மாணவர்களுக்குரிய பரிசில்கள் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும் மருதடியான் மலர்-2003 நூல் வெளியீட்டு விழாவின் போது வழங்கப்படவுள்ளன. (உ)

---

மேலதிகமாக 60 கோடி ரூபாவை செலுத்த அந்நிறுவனம் இணங்கியுள்ளது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களைச் சிறப்பாக வழி நடத்தி பொருளாதார அபிவிருத்தி நடைமுறைகளில் அதன் பங்களிப்புக்களை மேம்படுத்துவதற்காகவே காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை ''பிஸ்லறி'' நிறுவனத்திடம் ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

''ஸ்ரீலங்கா பிஸ்லறி'' நிறுவனம் சர்வதேச ரீதியில் நிதி மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த

---

புதிய இடத்தைத் தெரிவு செய்ய

# பாதுகாப்பு அமைச்சரின் செயலர் யாழ்.வருவார்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் புதிய படைத்தளமொன்றை அமைப்பதற்குரிய இடத்தினை தெரிவு செய்வது குறித்து ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின்பெர்னாண்டோ தலைமையிலான குழுவொன்று எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

யாழ்.மாநகர சபை வளாகத்தை அண்டிய பகுதிகளில்படைத்தளம் அமைக்கப்படுவதனை இடை நிறுத்தியமையை அடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

இக்குழுவினருடன் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன்,ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். (இ)

---

நோர்வே தற்பாதுகாப்பு இராணுவ முகாமை

# சமஷ்டி பற்றி ஆராயச் சென்ற புலிகளின் அரசியல் குழு பார்வையிட்டது

(கொழும்பு)

சமஷ்டி பற்றி ஆராய்வதற்காக ஐரோப்பா சென்றிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் 21 பேர் கொண்ட அரசியல் குழு உறுப்பினர்கள் நோர்வே நாட்டின் தற்பாதுகாப்பு இராணுவப் பயிற்சி முகாமை கடந்த முதலாம் திகதி பார்வையிட்டுள்ளது.

இவர்கள் நோர்வே நாட்டின் இராணுவ கட்டமைப்பு மற்றும் தற்பாதுகாப்பு இராணுவப் பயிற்சிகள் வழங்கப்படும் முறையினை அறிந்து கொள்ளும் நோக்கிலேயே மேற்படி பயிற்சி முகாமினைப் பார்வையிட்டுள்ளனர்.

சமாதானம் நிலவி வரும் நாடாக நோர்வே பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதும் 2ஆம் உலக மகா யுத்தத்தில் ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களால் ''கட்டாய இராணுவப் பயிற்சி சட்டமூலம்'' அங்கு அமுலாக்கப்பட்டிருப்பதும்,

அதன் பிரகாரம் தற்போது 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அங்கு கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

நோர்வே நாட்டில் போதிய இராணுவ பலம் இல்லாத காரணத்தினாலும் நாட்டின் தற்பாதுகாப்பிற்காகவும் மேற்கொண்டு வரும் இந்நடவடிக்கை ஈழத்திற்கும் பொருத்தமாக இருக்குமா? என்பது பற்றி விடுதலைப் புலிகள் ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவர்கள் சுவீடன், பின்லாந்து, டென்மார்க் ஆகிய ஸ்கன்டிநேவிய நாடுகளிற்கும் பயணத்தை மேற்கொண்டு சமஷ்டி மற்றும் இராணுவக் கட்டமைப்புப் பற்றி ஆராயவுள்ளனர். (உ-10)

# சனாதன தர்மத்தின் வழி நிற்கும் சமயங்களுக்கு தாயாகும் தன்மையுள்ள ஆதிச் சமயம் சைவமே

வேதவழிப்பட்ட சமயங்களைக் குறிப்பதற்கு இந்தியாவிலும் உல கத்திலும் 'இந்து மதம்' என்னும் சொல்லேகையாளப்படுகிறது. இப் பதத்திற்குப் பலர் பலபடப் பொருள் கொள்வர். ஹிந்து என்னும் சொல பாரசீக மொழியாகும். இதனைக் கிரேக்கர்கள் இந்து என வழங் கினர். அலெக்சாண்டர் இமயமலைக் கணவாய் வழி சிந்து நதிக்கரைக்கு வந்தபோது, அப்பகுதியில் வாழ்ந்த மக்களை 'சிந்து' எனவழங்கினா.அது பின் இந்து என மருவி வழங்கிற்று என வரலாற்றாசிரியர் கொள்வர். 'சப்தகல் மத்ருமம' என்னும் சமஸ்கிருத நிகண்டு 'இந்து என்னும் பதத் திற்கு தரும் விளக்கம் ஹரம் தூஷயதி இதி என்பதாகும். அதாவது ஈனையோ அன்றி ஈனச் செயலையோ வெறுப் பவர் என்ற காரணத்தால் அவர்கள் இந்து எனப்படும் சாதியினர் என நிகண்டு கூறுகிறது. ஹிந்தி நிகண்டு ஒன்று வேதம், ஸ்மிருதி, புராணம் முதலியவைகளையோ, இவைகளில் ஒன்றையோ பின் பற்றி நடப்பவர் இநதுஆவர்என்கிறது. 'ஹிம் ஸாயாம தூய தேய:ஸ: இத்ய பிதியதே' எனக் கூறுகிறது. அதாவது ஹிம்சையைக் கண்டு வருந்துபவன் இந்து எனப் படுவன் என்பதாகும். எனவே இச் சொல் உயிர்களின் துன்பங்களை கண்டு வருந்தும் அல்லது இரங்கும் மக்களை குறிப்பதன்றி எச் சமயத் தையும் குறிப்பிடாததாகும். இநது என்னும் சொல் ஒரு குழுவைக் குறிக்க எழுந்ததேயன்றி எந்த ஒரு சமயத்தையும் குறிக்க எழுந்ததன்று.

### சமயாதீதப்பழம்பொருள்

இப்பண்பு விளக்கம் நம் மொழி யிலுள்ள அற நூல்கள்யாவற்றிலும் பரக்கக்காண்கின்றோம்.

*எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணிஇரங்கவுந்நின்தெய்வஅருட் கருணை செய்யாய் பராபரமே.

* ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின் சாரப் பொய்யாமை நன்று.

* கொல்லாவிரதம் கொண்டவரே நல்லோர்மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

என்னும் ஞானம் பனுவல்கள் சைவத்திருமுறைகளில் விரிக்கக் காண்கின்றோம்.

**சைவசமயமே சமயஞ் சமயாதீ தப் பழம்**
**பொருளைக்**
**கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக்**
**கருத்தை விட்டு**
**பொய் வந்துழலுஞ் சமய நெறிபுகுத**
**வேண்டாம் முத்திதருந்**
**தெய்வசபையைக்காண்பதற்குச் சேர**
**வாரும் செகத்தீரே!**

என்னும் தாயுமானவர் பாடல் ஞாலங்கடந்த சமயாதீதப்பழம்பொருளாம் சைவம் என நிறுவுகிறது. வாழ்விய லில் ஆழப்பதிந்த சைவம், தயா மூல தன்மத்தின் வழி நின்று தரு மததை மக்கள் அன்றாடக்கடமை யில் பின்னிப்பிணைக்கின்றது.சிற்றுயிர் தொடககம், மண்ணுலக உயிர் அனைத்திற்கும் உணவளிக்கும இலவாழ்வான் தென்புலத்தார், தெயவ், விருந்து, ஒக்கல் தான் என்று ஐம்புலத்தார் கடன் முடிப்போனாகி றான். இவை மட்டுமன்றி எத்துனை வறியோர்க்கும் திருமூலர்,

**யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொருகைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரைதானே**


என ஏழ்மையிலும் வாழ்வியல் பண்பை விளக்குகிறார். இவற்றைத் தயா மூல தன்மம் என்பர்.இவை சைவின் கடனும், கடப்பாடும் ஆகும். அருளே வடிவான சைவம் தயாவான தத்து வனையே தன் முதற் கடவுளாகக் கொள்கிறது. இதுவே சைவர்களின் கருணைத்திறத்தை எடுத்துக் காட்டப் போதியசான்று.

## வெள்ளி நற்சிந்தனை

சங்க காலத்தில்முல்லைக்குத் தேர்ந்த பாரியும் மயிலிற்கு போர்வை கொடுத்த பேகனின் உள்ளப்பாங்கும வரலாறு கொண்டு தருமத்தின் தொன்மையை உணரமுடியும். பிற உயிர்கள் படும் துன்பம் கண்டு இரங்குவது சைவர்களின் உயிர்க்குணம் என்பதும் இதுவே. சைவர்களின் அடிப்படைக்கொள்கை என்பதும் தெளிவு. இது பற்றியே புலால் உண்ணாமை சைவத்தில் வற்புறுத்தப்பட்டது. சமய அருளாளரும் பிறஉயிர் படும் இன்ன லைக்கண்டு வருந்துவர். அன்றேல் துடைக்க முயல்வர். இதற்கு அருளாளர் வாழ்ந்து காட்டிய வழிகள் சான்று பகர்கின்றன.

### வைதீக சைவம்

சிவனை முழுமுதற்கடவுளாகவும் வேதம்,ஆகமம் போன்றவற்றை அங்க மாகவும் கொண்டு விளங்குவதே வைதீக சமயம். இவற்றில் பல தெயவீகக் கொள்கைகள் விபரிக்கப் படினும் அவ்வழிபாடு சிவனையேசென்ற டையும் என்பது சைவ சாஸ்திரமுடிபு. இதனைச் சம்பந்தப்பெருமான் தம் திவெழுகூற்றிருக்கையில் 'ஒருருவா யினை எனத்தொடங்கி நின்னை நினைய வல்லவர் இல்லை நீள் நிலததே' என நிறைவு செய்கின்றார். எண்ணம் சிந்தனை இவற்றைக் கடந்து யாவுமாய் உள்ள சிவன் போக்கும் வரவு மற்ற புண்ணியராகவும் சென்ற டையாத திருவுடையவராகவும் உள்ளார். சர்வ உலகமும்தானேயாய் உள்ள பரமபொருளை யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி மாதொரு பாகனார் தாம் வருவார் என்கிறது



நிறைமொழி.

சிவவழிபாட்டின் தொன்மையைச் சிந்து வெளி மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற தொல்பொருளாய் வுகள் தெளிவுபடுத்துகின்றன. அன் றியும் சங்கப் பேரிலக்கியம், இதிகாசம், புராணம் என்பன சிவ வழிபாட்டின் மூடமைவிதந்தோதுகின்றனதொன்மை யான ஆலயவழிபாட்டின் மரபுகள் சிவ வழிபாட்டை நிறுவ ஏதுவா கின்றன. காஞ்சிபுரத்தில் உள்ள பாடல் பெற்றதலங்களான திருக்கச்சித் திரு ஏகம்பம்,திருக்கச்சி காரைக் காடு, திருக்கச்சி அனோகதங்காவதம், திருக்கசசி ஓணகாந்தளி,திருக்கச்சி மேற்றளி ஆகியஐந்துதலங்களிலும் சிவனே மூல மூர்த்தி என்பதும் சக்திக் கெனத்தனித்தலம் இல்லை என்பதும் கொள்ளப்பட வேண்டி யது. சக்தி ஏலவார் குழலி என்னும் திருப்பெயரோடு எழுந்தருளியாகவே உள்ளாள் என்பது மனம் கொள்ளற் பாற்று.தத்துவஎழுச்சியுடன்உதயமான தாகக் கொள்ளபபடும் சதாசிவத் திருமேனி வழிபாடு சிவசக்தி பேத மில்லாப் பெருவாழ்விற்கு வழி கோலியது.

### சனாதனதர்மத்தின்தாய்

சனாதன தர்மத்தின் வழி நின்ற ஏனைய சமயங்கட்கும் தாயாம் தன்மை சைவத்தையே சாரும்.இதை நன்குணர்ந்த தாயுமானசுவாமிகள்,'ஆறனைததும புகும் கடல் போல் சமய கோடி அத் தனையும் தொடந்து ணர்ந்து புகும் ஆதி நட்பே' என அருளினார். இப்படிச் சிறப்பு வாய்ந்த சைவம் சிவத்தின் தன்மை கொண்டுதன் தொன்மையை நிறுவுகிறது. எவனி டம் உலகம் யாவையும் ஆக்கலும், நிலைபெறுத்தலும், ஒடுக்கலும் நடை பெறுகின்றனவோ அன்றியும் என்றும் உள்ளவராய், எப்போதும் தூயவராய், சுதந்திரம் உடையவராய், யாதிலும் வல்லவராய், எல்லாம் அறிபவராய் பெரும் கருணை உடையவராய், ஆசா னுக்கு ஆசனாய்இருப்பவன் எவனோ அவனே முதற்பொருள் சிவன் என்கின்றது வடமொழி சுலோகம் ஒன்று. 'ஸஈஸ: அநிர் வசனியப்: பிரேமஸ்வபே என்னும் பதத்திற்கு, சொலலிற்கு அடங்காத பகரவொண் ணாத அன்பு வடிவினன் என்கிறது.

## சிவதொண்டன்

இவனைப் பரம் பொருளாகக் கொளளும் சமயம் அருளை அஞ்ஞானி யாகக் கொண்டு பத்தியைப் பெற விழைகிறது.சமய குரவர்களும் சமய, ஆச்சாரியர்களும் சமயவாழ் விய லைதெளிவுற வாழ்ந்து காட்டியுள் ளனர். இவர்களைப் பின் பற்றி வளனம் பெற்றோர் அநேகர்.

### அறிவியலாளர் வியப்பு

நவநாகரீக விஞ்ஞான உலகம் அறிவியல் வேகத்தில் உலகின் பாதையையும் மாற்ற முயல்கிறது. மறுபுறத்தில் சைவத்தத்துவங்கள் சைவமெய்யியலை அறிவியலை விஞ்சி நிற்றலை இன்றைய அறி வியலாளர் கண்டு வியக்கின்றனர். அணுப்பிரிவு ஆய்வு தொடங்குவதற்கு முன்பே விநாயகர் அகவல் என்னும் நூல் அணு என்னும் பதத்தைக் கொண்டதுடன் 'அணுவுக்கணுவாய்' என அணுப் பகுப்பாய்வை முன்பே முன வைத்தது எனலாம்சைவ அருளா ளர்கள் எழுதிவைத்த சைவத்ததுவ அடிக்குறிப்புகள் விஞ்ஞானிகளின் ஆய்வுகளையும் விஞ்சி இறைவனின் அருளாற்றலைத் தெளிவுபடுத்துகின் றன. இவ்வருள்வலைப்பட்டோர் வாழ்ந்த காலம் கூட விஞ்ஞான யுகத்தால் எட்டமுடியாது உள்ளது.

சைவ சமயமே மெய்ச்சமயம் எனக்கொள்ளும் தாயுமான சுவாமிகள் 'சன்மார்க்க நெறியதனின் பொருளும் வேறு சமய சங்கேதப்பொருளும் தான் ஒன்றாகப் பன்மார்க்க நெறியில் இன்றும் கண்ட தில்லை எனக் கூறியுள்ளார். இதில் சன்மார்க்க நெறி என்பது 'தத்துவக்கொள் கையையும், சமயம் சங்ககேதம் என்பது மரபு வழிப்பட்ட கிரியை யையும் இவ்விரு வழியும் ஒன்றா கக்காண்பது போல் வேறுஎங்கும் இல்லை என்பது பொருள். இத் துணைச் சிறப்பு வாய்ந்த சைவம் காலத்தால் பொருளால் தத்துவத் தால் தொன்மை கொண்டதோடு என்றும்இளமையுடையதாக உள் ளது. இவற்றினின் றும் சைவ சமயம் தொன்மையும் மெய்மையும் கொண் டது என்பது தெளிவு. □

## திருவாசகமுற்றோதல்

(யாழ்ப்பாணம்)

ஏழாலைமேற்கு துர்க்காதேவிஆலயத தில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைதிருவாசகமுற்றோதல் இடம்பெறவுளளது. (உ)

## சூரபத்மன் வதைபடலம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் வருடந் தோறும் நடை பெற்று வரும் கந்த புராண படனத்தில் எதிர் வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணி முதல் சூரபத்மன் வதை படலம் இடம் பெறவுள்ளது. (உ)

## நாளை கொடியேற்றம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்தி விநாயகர் ஆலயவருடாந்த உற் சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர் வரும் 14,15 ஆம் திகதிமுறையே தேர்,தீர்த்த உற்சவங் கள் இடம்பெறவுள்ளன.(உ-126)

## பஸ் பழுது உழவு இயந்திரத்தில் பயணம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கான சேவையில் ஈடுபட்டுவந்த இலங்கைப்போக்கு வரத்து சபைக்குச் செந்தமான போருந்து பழுதடைந்த நிலையில் உள்ளதால்,சுமார் 4 மாதங்களாக இச்சேவை இடம்பெறவில்லை .

இதனால்தற்போது, இப்பகுதி மக்கள் உழவு இயந்திரத்தில் பயணம் செய்வதுடன்,இதனால் பல்வேறு சிரமங்களையும் அனுபவிக்கின்றனர்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவு மக்கள் கேட்டுள்ளனர். (உ-126)

## வீடமைக்க நடவடிக்கை

(குருநகர்)

அரியாலை முள்ளிப்பகுதியில் உதயபுரம் மற்றும் மணியந் தோட்டப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்துள்ள100 குடும்பங்களுக்கு வீடுகள் அமைந்துக் கொடுக்க நல்லூர் பிரதேச சபை நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் தற்காலிகமாக தங்கியுள்ள மணி யந் தோட்டம்,உதயபுரம் வாழ் மக் கள் மேற்படி திட்டத்தில் வீடுகளை பெற்றுக்கொள்ள இடம் பெயர்ந் தோர் சங்கத்தலைவர் இ. சூசைப் பிள்ளை இல. 30 மவுண்கார்மல் வீதி குருநகர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள் ளது. (உ-74)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் ஆரம்பம்

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இம் மாதம் முதல்நான்கு டெங்கு நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச் சித்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள் ளதாக உதவிப் பிரதேசசெயலர் அறி வித்துள்ளார்.

இது தொடர்பாக கடந்த வாரம் பிரதேச செயலக மாகநாட்டு மண்ட பத்தில் உதவிப் பிரதேச செயலா ளர் எஸ். செல்வராசா தலைமை யில் கலந்துரையாடல் ஒன்று நடை பெற்றது. இப்பிரதேசங்களைச் சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட இக் கலந்துரை யாடலில் மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரியின்பிரதிநிதிகலந்துகொண்டு, இப்பிரதேசங்களில் செயற் படுத்தக் கூடி டெங்குக்காய்ச்சல் ஒழிப்புத் திட்டம் தொடர்பாக கருத்துரை வழங் கினார்.

இதன் முதற் கட்டமாக சனசமூக நிலையங்கள்,மாதர் சங்கங்கள், இளைஞர்கழகங்கள்என்பவற்றின் ஒத்துழைப்புடன் முதலில் கலந்துரையா டல்கள் நடத்தி அதன் பின்னர் சிரமதான நிகழ்வுகள் ஒழுங்குபடுத்து வது எனத்தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் நேற்று சுதுமலை வடக்கு,சுதுமலை தெற்கு, சாவற் காட்டுப்பிரிவுகளிற்கான கலந்துரையா டல் இடம்பெற்றது.

நாளை சனிக்கிழமை காலை 9.மணிக்கு ஆனைக்கோட்டைகரைப் பிரான் ஆலய முன்றலில் ஆனைக் கோட்டை,உயரப்புலம், கிராமசேவை யாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக் கும்,

7ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு நவாலி வை.எம். சி.ஏ. கட்டடத்தில் நவாலிகிழக்கு,நவாலி தெற்கு,நவாலி வடக்குகிராம சேவை யாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக் களுக்கும், எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை மு்.ப. 10மணிக்கு, மாதகல் அம்பாள் சனசமூக நிலைய மண்டபத்தில் மாதகல் மேற்கு, கிழக்கு பண்டத்தரிப்பு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. (உ-252)

# கைதான மகன் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவில்லை

## ம.உ.ஆ.கு.இல் தாயார் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆதாரமற்ற குற்றச்சாட்டின்பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தனது 14வயது மகன் இது வரை நீதிமன்றத்தில்ஆஜர் செய்யப்படவில்லை என,தாய் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத் தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பருத்தித்துறைச் சேர்ந்த சி. சிறி தரன் (வயது14) என்ற தன்னுடைய மகன் சகபாடிகளுடன் விளையாடி விடடு வீடு திரும்பிக்கொண்டிருந் ததாகவும், வீதியில் கண்டெடுத்த பெப்சி சோடாப் போத்தல் ஒன்றுடன் வந்து கொண்டிருந்தபோது,அதற்குள் கசிப்பு இருப்பதாகக்கூறி தனது மகனைக் கைது செய்த பொலிஸார், இது வரை தனது மகனை நீதிமன்றில் ஆஜர்படுத்தவோ, விடுதலைசெய் யவோ முயற்சிஎடுக்கவில்லை என வும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (உ-7)

## மயானம் சேதம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பகுதியில் அமைந் துள்ள வேம்பிராய் இந்து மயானம் கடந்தகால போர்நடவடிக்கைகளால் பெரிதும் சேதமடைந்துள்ளது.

மயானத்தின் மடம்,கிணறு,மதில் என்பன சேதமடைந்து இருப்பதுடன் இங்கு பெருமளவு பற்றைகளும் வளர்ந்துகாணப்படுகின்றன.

இதன் காரணமாக மீளக்குடியமர்ந் துள்ள,இம் மயானப்பாவனையாளர் கள் பெரும் சிரமங்களைஅனுபவித்து வருகின்றனர். (உ-36)

# திருமலை அபிவிருத்தித்திட்ட செலவு மதிப்பீடு கையளிப்பு

(கிளிநொச்சி )

திருகோணமலை மாவட்டத்தின் அபவிருத்தித்திட்டங்களுக்கானசெலவு மதிப்பீடாக 351 மில்லியனை வரை யறை செய்து 24 திட்ட முன் மொழி வுகளை வடக்கு -கிழக்கு உனடி மனிதாபிமான புனர்வாழ்வு அபி விருத்திப்பணிகளுக்கான உபகுழு வான சிரானிடம் விடுதலைப் புலிகள் கையளித்துள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு அபிவிருத்திப்பணி களின் திட்ட் செலவு மதிப்பீட்டைமாவட்ட ரீதியாக ஆராய்ந்து பரிந்துரை செய்து வரும் விடுதலைப்புலிகள் முதற் கட்டமாக திருகோணமலை மாவட் டத்தின் அபிவிருத்தித்திட்டச் செலவுக் கான முன்மொழிவை சிரானின் பணிப்பாளர் நாயகம் செல்வின் இரேனி யசிடம் கையளித்துள்ளார். (உ)

# வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் முறைசாராக் கல்விக் கற்கை 10 ஆம் திகதி ஆரம்பம்

(சங்கானை)

வலிகாமம் கல்வி வலயத்திற் குட்பட்ட பாடசாலைகளில் 2003ஆம் ஆண்டிற்கான முறைசாராக் கல்வி தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் எதிர் வரும் 10 ஆம் திகதி வியாழக் கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இதன்படி, சங்கானை கல்வி கோட்டத்தைச்சேர்ந்த விக்டோரியாக் கல்லூரியில் கணனிக்கற்கை நெறி யும், வட்டு. இந்துக்கல்லூரியில உடயமைத்தல் கற்கை நெறியும் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியா லயத்தில் தமிழ் தட்டெழுத்து சுருக கெழுத்துகற்கை நெறியும்,

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத் தைச் சேர்ந்த புனித கென்றியரசர் கல்லூரியில் ஆங்கிலத்தட்டெழுத்து சுருக்கெழுத்து கற்கை நெறியும் சென் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை யில தமிழ் தட்டெழுத்து சுருக் கெழுத்து கற்கை நெறியும்,

உடுவில் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த இணுவில் மத்திய கல்லூரி யில் வீட்டு மின் இணைப்புக் கற்கை நெறியும், இராமநாதன் கல்லூரியில மனைமுகாமைத்துவ கற்கைநெறியும் உடுவில் முருகமூர்த்திவித்தியால யத்தில் உடையமைத்தல் கற்கை நெறியும்,

தெல்லிப்பழை கல்விக்கோட் டததைச் சேர்ந்த மல்லாகம் மகாவித் தியாலயத்தில் தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து கற்கை நெறியும் மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத் தில் கடல்வளம் கற்கை நெறியும் இளவாலை மெய்கண்டான் வித்தியா லயத்தில் உடையமைத்தல் கற்கை நெறியும் அருணோதயக் கல்லூரியில் சிகை அலங்காரமும் ஒப்பனையும் கற்கை நெறியும் இடம் பெறவுள் ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநா தன் அறிவித்துள்ளார். (உ-92)



வட ஈராக்கில் இரு விமானங்கள் குண்டு வீச்சுக்கு புறப்பட்டு செல்கின்றன.



பக்தாத்திற்கு 80 கி.மீ. தூரத்தில் ஹில்லா என்ற இடத்தில் குண்டு வீச்சில் காயமுற்ற இரு சிறுவர்கள் சிகிச்சைக்காக காத்திருக்கின்றனர்.



ஈராக்கியரால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பிரிட்டிஷ் படை வீராங்கனையுடன் பிரிகேடியர் ஜெனரல் வின்செனட் புரூக்ஸ்



தென் ஈராக்கில் அஸ் சுபயிர் என்ற இடத்தில் பிரிட்டிஷ் வீரர் ஒருவரை சூழ்ந்து நிற்கிறார்கள் அப்பகுதி சிறுவர்கள்

# வடக்கில் கூட்டுப்படைகளுடன்

# ஈராக்கியர் கடும் மோதல்

வடக்கில் குடியரசு காவலர் படைகளுடன் கூட்டுப்படைகள் கடும் சண்டையில் ஈடுபட்டிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

இனிவரும் சண்டை மிகக் கடுமையாக இருக்கக் கூடும் என்றும், பக்தாத்துக்குள் சுலபமாக நுழைந்துவிட முடியும் என்று எதிர் பார்க்கவில்லை என்றும், இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் இன்னும் நிலவுவதாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறியிருக்கின்றது.

தலைநகர் பக்தாத்தை காத்துக் கொண்டிருக்கும் குடியரசு காவலர் படையின் பீரங்கி மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் வரம் பிற்கு உட்பட்ட பகுதியைத் தான் சதாம் ஹுசைன் செங்கோட்டுப் பகுதி என்று அறிவித்திருக்கின்றார்.

### குர்திஷ் படைகள் நடவடிக்கை

இதனிடையே வடக்கு ஈராக்கில் அன்ஷர் அல் இஸ்லாம் குழுவைச் சேர்ந்த 24 இஸ்லாமிய அடிப்படைவாதிகளை குர்துப் படைகள் கொன்றுவிட்டதாக குர்த் தொலைக்காட்சி அறிவித்திருக்கின்றது. ஈராக்கின் இரண்டு பிரதான குர்து குழுக்களில் ஒன்றான குர்திஸ்தான் தேசபக்தி முன்னணிப் படையினர் 3 இஸ்லாமிய அடிப்படைவாதிகளை போர்க்கைதிகளாக பிடித்திருக்கின்றார்கள்.

அன்ஷார் அல் இஸ்லாம் குழுவில் ஆப்கானிஸ்தானின் பயிற்சி பெற்ற 700 அரபுப் படை வீரர்கள் இடம்பெற்றிருப்பதாகவும், அல் கெய்டா பயங்கரவாத அமைப்புடன் அதற்கு தொடர்பு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

வடக்கு ஈராக்கில் தரைவழித் தாக்குதலிற்கு குர்துப்படைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வடக்கு ஈராக்கில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் துருக்கி அங்கு படைகளை அனுப்ப வேண்டியதில்லை என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜெனரல் கொலின் பவல் கூறியிருக்கின்றார்.

மற்றொரு திருப்பமாக பிரிட்டோரியாவில் உள்ள ஈராக்கியத் தூதரகத்தை மூடிவிட்டு அங்குள்ள இராஜியத்துறையினரை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற அமெரிக்காவின் வேண்டு கோளை தென்னாபிரிக்கா அரசு நிராகரித்து விட்டது.

சதாம் ஹுசைன் அரசு கவிழ்ந்த பிறகு விரைவில் கூட்டணிப் படைகள் மாற்று ஈராக்கிய அரசை ஏற்படுத்தி அதனிடம் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் கூறியிருக்கின்றார்.

போருக்குப் பிறகு ஈராக்கை நிர்வகிப்பதற்காக அமெரிக்கா குழு ஒன்றை ஏற்படுத்தி இருப்பதோடு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி லெப்ரினன் ஜெனரல் ஜேஹானரை சிவில் நிர்வாகியாக நியமித் திருக்கின்றது.

(பி-9)

# யுத்தத்தில் எந்தத் தரப்புக்கும் வெற்றி கிட்டாது

## கோபி அனான்

ஈராக் யுத்தத்தில் உடனடி யுத்த நிறுத்தம் ஏற்படும் சாத்தியம் இல்லை என்று கூறும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபி அனான், இந்த யுத்தத்தில் அனைத்து தரப்பினரும் தோல்வி யடையும் நிலை ஏற்படும் என்று எச்சரித்துள்ளார்.

கட்டாரில் உள்ள அல் ஜஸீரா தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஈராக் யுத்தம் எவ்வளவு காலம் இடம்பெறும் என்பதைக் கூற முடியாதிருப்பதாக குறிப்பிட்ட கோபி அனான், இந்த யுத்தத்திற் கான காரணத்தையும் நியாயப்படுத்த முடியாதிருப்பதாக குறிப்பிட் டார்.


இதேவேளை, யுத்தத்தில் ஈடுபட்டுவரும் அனைத்துத் தரப்பினரும் சர்வதேச மனித உரிமைகள் சாசனங்களின் படி பொதுமக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டுமென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

(பி-2)

# ஈராக்கில் ஸ்கட் ரக ஏவுகணைகள் கூட்டுப்படை கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கின் மேற்குப் பகுதியில் இஸ்ரேலிலிருந்து தாக்கக் கூடிய தொலைவில் ஸ்கட் ரக ஏவுகணைகள் இருப்பதற்கான உறுதியான



பஸ்ராவில் எண்ணெய் கிணறு ஒன்று எரியும் காட்சி



ஜோர்டானுக்கு தப்பிச் சென்றுள்ள ஈராக்கிய அகதிகள்



தென் ஈராக்கில் அமெரிக்க வீரர்கள் மலைகள், ஓடைகளைக் கடந்து போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.



யுத்தத்தினால் தனது வீட்டின் இடிபாடுகளில் சிக்கி தலையில் படுகாயமடைந்த இச்சிறுவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான்.



தென் ஈராக்கில் அஸ் சுபயிர் என்ற இடத்தில் பிரிட்டிஷ் வீரர் ஒருவரை சூழ்ந்து நிற்கிறார்கள் அப்பகுதி சிறுவர்கள்



அமெரிக்க வீரர்கள் குவைத்தில் சற்று ஓய்வு எடுக்கிறார்கள்



அமெரிக்க இராணுவவீரர் ஒருவர் யுத்த தளபாடங்களுடன் காணப்படுகின்றார்.

(வாஷிங்டன்)

ஈராக்கின் மேற்குப் பகுதியில் இஸ்ரேலிலிருந்து தாக்கக் கூடிய தொலைவில் ஸ்கட் ரக ஏவுகணைகள் இருப்பதற்கான உறுதியான ஆதாரம் கிடைக்கப் பெற்றிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க உளவுத்துறை அதிகாரி ஒருவர் டைம் என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித் துள்ளார்.

சரியான நேரத்தில் ஸ்கட் ரக ஏவுகணைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் சதாம் ஹுசைன் இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

ஏவுகணைகள் வீசப்படும் கருவி களைக் கொண்டு மேற்கு ஈராக்கின் பாலைவனப் பகுதியில் அமெரிக்க கூட்டணிப்படைகள் தீவிர தேடுதல் வேட்டையில் இருந்து வருவதாகவும் அவர் கூறினார்.

பஸ்ரா நகரில் இரு தரப்பினரும் பயங்கர மோதலில் ஈடுபட்டிருப்பதால் அமெரிக்க வீரர்களுக்கு சவாலான சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

ஒட்டுமொத்தமாக அமெரிக்க தரப்பில் எத்தனை வீரர்கள் தங்கள் உயிர்களை தியாகம் செய்வார்கள் என்பது தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (பி)



அமெரிக்கப் படையினரின் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இரண்டு ஹெலிகொப்டர்கள்.



அமெரிக்கரின் குண்டு வீச்சினால் சின்னாபின்னப்பட்டு சிதறிக் கிடக்கும் வீடுகள், கட்டடங்களை ஆச்சரியத்துடன் பார்வையிடும் ஈராக்கியச் சிறுவர்கள்

அமெரிக்கரின் குண்டு வீச்சினால் சேதமுற்றிருக்கும் வீடுகளையும் கட்டடங்களையும் கடந்து செல்லும் ஈராக்கிய பெண்மணி





பிளக்ஹாக் ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது.

## இன்று ஒரு தகவல்

# பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகின்றான்

"பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான்" என்று ஒரு கோயிலில் பெரியவர் ஒருவர் பேசினார். தைத்திரீய உபநிஷத்து அப்படிச் சொல்லுகிறதாம். இதைக் கேட்கும் பொழுது நமக்கு ஒரு சந்தேகம் வரும், அது எப்படி? "பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான்" என்றால் சிங்கத்தை அறிந்தவன் சிங்கமாகிறானா? தோசையை அறிந்தவன் தோசை ஆகிறானா? என்கின்ற சந்தேகம் வருவதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை இது இயற்கை, இதற்கும் அந்தப் பெரியவரே பதில் சொல்கிறார்.

சிங்கம் வேறு நாம்வேறுயூ அதனால் சிங்கத்தை அறிந்தவன் சிங்கமாக மாட்டான். ஆனால் பிரம்மம் வேறு நாம்வேறில்லை. அதனால் பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமாகிறான் என்பது அவரின் விளக்கம். மனிதன் தான் தான் பிரம்மம் என்பது தெரியாததினாலேதான் அதை வேறெங்கேயோ தேடிக் கொண்டிருக்கிறான். கடைசியிலே அது தான், தான் என்பதை புரிந்து கொள்கிறபொழுது அவன் பிரம்மமாகிவிடுகிறான். இதை விளக்குவதற்கு ஓர் உபநிஷத்துக் கதையே இருக்கிறது. நமக்குத் தெரிந்த கதை தான். ஆனால் அதை வேறு அர்த்தத்தில் விளையாட்டாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு சமயம் பத்து நண்பர்கள் ஒரு காட்டுவழியாகப் போய்ககொண்டிருககிறார்கள். குறுக்கே ஒரு நதி. அதைக் கடந்து மறுபக்கம் போகவேண்டும். எல்லாரும் ஒரு வழியாக அதைக் கடந்து அடுத்த கரைக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். அங்கே போய்ச் சேர்ந்தன் பின் எல்லோரும் பத்திரமாக வந்து சேர்ந்து விட்டோமா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக எண்ணிப் பார்க்கிறான் அந்தக் கூட்டத்துத்தலைவன், அவர்கள் மொத்தம் பத்துப்பேர். ஆனால் இவன் எண்ணிப் பார்கின்ற பொழுது 9 தான் வருகிறது. ஏனென்றால் அவன் தன்னை விட்டுவிட்டான். எதிரில் நிற்கிறவர்களை மட்டுமே என்னுகிறான். "ஐயையோ பத்தாவது ஆள் எங்கே?" என்று பதறுகிறான்.

"சரி, நீ இருநான் எண்ணுகிறேன்" என்று சொல்லிவிட்டு இன்னொருவன் வந்து எண்ணினான், அவனும் தன்னை வட்டு விட்டு எண்ணுகிறான். 9 தான் வருகிறது. எல்லோரும் குய்யோ முறையோ என்று கத்த ஆரம்பித்துவிட்டார்கள். அந்தச் சமயத்தில் ஒரு பெரியவர் அந்தப்பக்கமாக வருகிறார், "என்ன விஷயம்" என்று விசாரிக்கிறார். "பத்தாவது ஆளை ஆறு அடித்துக் கொண்டு போய்விட்டது" என்று சொல்லி இவர்கள் அழுகிறார்கள். "சரி, ஆழாதீர்கள்யூ என்று சொல்லி அந்தத் தலைவனைப் பார்த்து இப்படி வா என்கிறார். வருகிறான். இப்பொழுது எனக்கு முன்னால் ஒரு தரம் எண்ணு பார்க்கலாம்" என்கிறார். ஒன்று இரண்டு என ஆரம்பித்து ஒன்பதிலே வந்து முடிக்கிறான். உடனே பெரியவர் "நீ தான் அந்தப் பத்தாவது ஆள்" என்கிறார். இது உண்மையூ

ஆமாம், நாம் தான் அதுயூ நாம் தான் நம்மை வேறெங்கேயோ தேடிக்கொண்டிருக்கிறோம். நாம் எங்கேயோ தேடிக்கொண்டிருக்கிறறோமோ அந்தப் பிரம்மம் நாம் தான்யூ இப்படி ஒரு பெரிய உண்மையை விளக்குவதற்காகத் தான் அப்படி ஒரு கதை சொல்லப்பட்டது. ஆனால அதை நாம் வேறு விதமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். எப்படித் தெரியுமா?

ஓர் ஆற்றங்கரையில் ஒரு பத்துப்பேர் விழித்துக் கொண்டிருந்தார்களாம், அந்தப் பக்கம் வந்த ஒருவன் "ஏன் இப்படி விழித்துக் கொண்டு நிற்கிறீர்கள்?" என்று கேட்டிருகிறான். "எங்களுக்கு நீந்தத் தெரியாது. அடுத்தகரைக்குப் போய்ச் சேர வேண்டும்" என்றார்கள். "சரியூ நான் கொண்டுபோய் விடுகிறேன் எல்லோரும் அக்கரைக்குப் போய்ச் சேர்ந்தவுடன் ஆளுக்கு ஒரு ரூபா வீதமாக மொத்தம் 10 ரூபா கொடுக்க வேண்டும்" என்றான். சரியூ என்று ஒத்துக் கொண்டார்கள். இவன் ஒவ்வொருவராகக் கையைப் பிடித்து மெதுவாக ஆற்றில் இறக்கி அழைத்துக் கொண்டு போனான். 9 பேரைக் கரை சேர்த்துவிட்டான். பத்தாவது ஆள் பாதி ஆற்றில் போய்க்கொண்டிருக்கிறபொழுது திடீரென்று வெள்ளம் வந்துவிட்டது. பிடிநழுவிப்போய் விட்டது. கையை விட்டுவிட்டான். வெள்ளம் அடித்துககொண்டு போய்விட்டது. அழைத்துக் கொண்டு வந்தவன் நிச்சலடித்துத் தட்டுத் தடுமாறிக் கரைக்கு வந்து சேர்ந்து விட்டான்.

கரையில் இருந்தவர்களுக்கு இந்தவிஷயம் தெரியாது. இருந்தாலும் இவன் உடம்பு முழுவதும் நனைந்து கொஞ்சம அதிகமாகவே மூச்சுவாங்க நின்று கொண்டிருந்தான். ஏன் இப்படி மூச்சுவாங்குகிறது? என்ன விஷயம் என்று கேட்டார்களாம். அதற்கு இவன் கொஞ்சமும அலட்டிக் கொள்ளாமல வேறு ஒன்றுமில்லை. "நீங்கள் கொடுக்க வேண்டிய பத்து ரூபாவில் ஒரு ரூபா குறைந்து விட்டது. அவ்வளவுதான்" என்றானாம்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# மானிடத்தின் தமிழ்க்கூடல் தொடர்கிறது
# திருமலையில் இசை, நடன, நாடக விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இசை, நடன, நாடக விழா எதிர்வரும் 8 ஆந் திகதி தொடக்கம 12ஆம் திகதி வரை தினமும் பிற்பகல 4.00 மணி முதல் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஈழத்தின பாரம்பரிய கலைகள், பணபாடு ஆகிவற்றை நவீன அரங்க நியமஙகளுடன் இணைந்து சிறப்பாக அளிக்கை செய்யப்பட வுளள இக் கலைப் பெருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாக தமிழகத்துக் கலைஞர்களின் சிறப்பு நிகழ்ச்சிகள சிங்களப் பாரம்புரிய நவீன அரங்க அளிக்கைகள், ஈழத்தின் புகழ் பெற்ற கலைஞர்களின் இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள், சிறப்புரைகள், கருத்துரைகள் என்பன இடம் பெறவுள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணம், வன்னி, மலையகம், மட்டக்களப்பு, தென்னிலங்கை ஆகிய பகுதிகளில இருந்தும் இவ் விழாவிற்கு வருகை தரவுள்ள கலைஞர்கள்,பேராளர்கள் தங்குவற்குரிய அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈழத்தின் எழுத்தாளர்கள், கலைஞர்களின் சங்கமிப்பாக நிகழ்ந்த மானிடத்தின் தமிழ்க் கூடல் நிகழ்ச்சியில் இரண்டாம் கட்ட நிகழ்வாக இது நடைபெற வுள்ளது.

வாத்திய இசை நிகழ்ச்சிகளாக ஈழத்தின் தலை சிறந்த நாதஸ்வர மேதைகளின் நாதஸ்வரம், இசைஞான திலகம் மு. இராதா கிருஷ்ணனின் வயலினிசை, மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடன கல்லூரி மாணவர்களின் "வாத்யப் பிருந்தா" என்பனவும், சாகித்திய இசைப் பேரரசு எம்.வி. என். நவரட்ணம், இசைக்கலை மணி திருமதி பிரியதர்சினி ஜெயகதீஸ்வரன், சங்கீதரத்னம் ஞானகுமாரி சிவநேசன்,ஹம்சத்வனி பாஸ்கரன, சங்கீதபூஷணம் பொன். குமாரசாமி, இசைமாணி தவநாதன் ரொபேட், சங்கீத பூஷணம் எஸ். பத்மலிங்கம் ஆகிய ஈழத்தின் புகழ் பூத்த கலைஞர்கள் பங்கு கொள்ளும் வாயப்பாட்டு இசை நிகழ்ச்சிகளும் இதில் இடம் பெறவுள்ளன.

இவற்றுடன் தமிழ் பேசும் மக்களின் கிராமிய பாரம்பரிய வாழ்வியலைப் புலப்படுத்தும் திருமலைக் கலைஞர் எஸ். டொமினிக் குழுவினரின் "கிராமிய இசைத் தென்றல்" நிகழ்ச்சியும், பவானி குகப்பிரியாவின் நெறியாழ்கையில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் "காவடி நடனம்" ஷர்மிளா கொரைராவின் மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக் கல்லூரி மாணவிகள் வழங்கும "எரிமலைகள்" நாட்டிய நாடகம் என்பனவும் இராமநாதன் நுண்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கிருஷாந்தி ரவீந்திராவின் சிறப்பு நடன நிகழ்சசியான "நாட்டியாஞ்சலியும்" மேடையேற்றப்படவுள்ளது.

இலங்கையின் பலபாகங்களிலும் பல்லாயிரக்கணக்கான தடவைகள் மேடையேற்றப்பட்ட மோடியுற்ற உள் அகப் பிரச்சினை சார்ந்த நாடகமான, பேராசிரியர் சரத் சந்திராவின் "மனமே" ஆக் கிரமிப்புப் படையினரின் செய்கைகளால் விளையும் போர் அனர்த்தங்களை விளக்கும் தர்மசிறி பண்டாநாயக்காவின் "றோஜனத்துப் பெண்கள்", திருமறைக் கலா மன்றத்தின் திருமலைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும், "கூடித் துயர் வெல்" நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் மேடையேற்றப்பட்டு பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற மனித அவலங்களின் உணர்வுகளை வெளிக்காட்டும் புதுவை அன்பனின் புரட்சிப் பறவைகள் வழங்கும் "கரைதேடும ஓடங்கள்" மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரிக் கலைஞர்கள் வழங்கும் எம்.பி. ரவீந்திராவன் "நெருப்புக்குள் வாழ்வு", கலைக் கல்லூரிக கலைஞர்கள் வழங்கும் என். பாலாவின் "இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜா", தேவானத்தாவின் "அக்கினிப் பெருமூச்சு" ஆகிய நாடகங்களும் பல்லாயிரக் கணக்கான ரசிகாகளின் பாராட்டைப பெற்ற "தமிழீழ விடுதலை இசைக் குழுவினரின்" "தாயக இராகங்கள்" சிறப்பு இசை நிகழ்ச்சிகளும இதில் இடம்பெறவுள்ளன. (உ)

## ஈராக் மீதான போரைக் கண்டித்து
# மூதூரில் நேற்றுப் பூரண ஹர்த்தால்

(திருகோணமலை)

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதலைக் கண்டித்து நேற்றைய தினம் மூதூர் பிரதேசத்தில் பூரண கர்த்தாலும் ஆர்ப்பட்டப் பேரணியும் நடைபெற்றது.

இதனால் மூதூர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டு இருந்ததுடன், வங்கிகள், பாடசாலைகள் அரச அலுவலகங்கள் எவையும் இயங்கவில்லை.

அத்துடன் போக்குவரத்தும் மிக குறைவாகவே இடம்பெற்றதால் மூதூர் பிரதேசம் மிகவும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

இதேவேளை, மூதூர் இறங்குதுறையில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி முத்தவெளி மைதானத்தைச் சென்றடைந்தது.

அங்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ டபிள்யூ. புஷ்ஷின் கொடும் பாவியும் எரிக்கப்பட்டதுடன்.

அதனைத் தொடர்ந்து கண்டனப் பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

இறுதியாக அமெரிக்கத் துாதரகத்தில் கையளிக்கும் வகையில் மூதூர் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப் பட்டது. (உ-10)

## அமெ. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள ஆக்கிரமிப்பு யுதத்தை உடன் நிறுத்துமாறு கோரி இன்று மு.ப. 11 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

புதிய ஜனநாயகக்கட்சி ஏற்பாடு செய்துள்ள இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சமாதானத்தை விரும்பும் சகல மக்களையும்,பொது அமைப்புகளையும் கலந்து கொள்ளுமாறு கேக்கப்பட்டுள்ளது. (உ-10)

## இராசி பலன்

**04.04.2003**
**(பங்குனி 21, வெள்ளி)**

**திருதியை முழுவதும்**
**பரணி முழுவதும்**
**இராகுகாலம் 10.40 - 12.10**
**சுபநேரம் 6.10 - 7.40**

**மேடம்**
ஜன வசியம், தொழில் முன்னேற்றம், புதிய சிந்தை, போசன சுகம்

**இடபம்**
சுபசெலவு, காரிய அலைச்சல், தொழில் விருத்தி, சயன சுகக்குறைவு

**மிதுனம்**
நல்லகாரியம், புதிய திருப்பம், குடும்ப சுகம், கீர்த்தி

**கடகம்**
செய்தொழில்முன்னேற்றம், அதிகாரம், தெய்வதரிசனம், தூரதேச செய்தி

**சிங்கம்**
வயிற்றுக் கோளாறு, முயற்சி தாமதம், திடீர் பயணம், ரோக பயம்

**கன்னி**
பிரயாணத் தடங்கல், உறவினர் மனஸ்தாபம் ,கொடுக்கல் வாங்கல் பிணக்கு, ஆரோக்கியக் குறைவு

**துலாம்**
காரிய சித்தி, தேக ஆரோக்கியம், பயணம், தனவரவும்,

**விருச்சிகம்**
புதிய தொழில் சிந்தை, சத்துரு ஜெயம், உறவினர் சந்திப்பு, மனமகிழச்சி

**தனுசு**
போசன சுகம், குடும்பக் கவலை, செல்வாக்குக் குறைவு, முயற்சி தாமதம்

**மகரம்**
மாதாசுகம், தெய்வ சிந்தை, புதியது அறிதல், காரிய தாமதம்

**கும்பம்**
அன்னியர் சந்திப்பு, காரிய நன்மை, பிரயாண நன்மை, தனவரவு

**மீனம்**
மனக்கிலேசம், கடுமையான வார்த்தை, அதிக செலவு, காரிய தடங்கல்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
**வளவன்.**


உங்கள் அபிமானத்திற்குரிய

வலம்புரி VALAMPURI சங்கு நாதம் Sankunatham

நடாத்தும்

**எழுத்தாளர் சபை அங்குரார்ப்பண வைபவம்**

காலம் : நாளை (05.04.2003) சனிக்கிழமை காலை 10.30 மணி

இடம் : வலம்புரி கேட்போர் கூடம்

தலைவர் : திரு. சி. வெற்றிவேலாயுதம் (நிர்வாக இயக்குநர், வலம்புரி)

பிரதம விருந்தினர் : மூத்த இலக்கிய கர்த்தா (பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)

சிறப்பு விருந்தினர் : உயர்திரு. என். சரவணபவன் (பிராந்திய முகாமையாளர், யாழ் ரெலிக்கொம்)

ஆசியுரை : அருட்திரு நீயன் மரியாம்பிள்ளை அடிகளார் (பிரதம ஆசிரியர், பாதுகாவலன்)
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

வரவேற்புரை : கவிஞர் க. துரைசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரிய பீடம், வலம்புரி)

சிறப்புரை : மூத்த எழுத்தாளர் கலாநிதி க. குணராசா (செங்கையாழியான்)

கருத்துரை :

எழுத்தாளர் அறிமுகம் :

நன்றியுரை : திரு. மு. வாமதேவன் (செய்தி ஆசிரியர், வலம்புரி)

எழுத்தாளர் சபைக்கு விண்ணப்பித்தவர்களையும் ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.
(யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி அருகாமை)

வலம்புரிக்குடும்பம்

*அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க*
*இகல் வேந்தர்ச் சேர்ந் தொழுகு வார்*
*-குறள்-*

# வலம்புரி

## பொறுப்பற்ற செயற்பாடு

யாழ்.கோட்டைப் பகுதியில் பாரிய இராணுவ முகாம் அமைக்கும் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளது.யாழ்.ஞானம்ஸ் ஹோட்டல் மற்றும் சுபாஸ் ஹோட்டல் ஆகியவற்றில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்காகவே யாழ். கோட்டைப் பகுதியை அண்மித்த யாழ்.மாநகர சபை வளாகம் மற்றும் இதர பகுதிகளை உள்ளடக்கியதாகப் பாரிய இராணுவ முகாம் அமைக்கும் பூர்வாங்கப் பணிகள் இடம் பெற்றன.

எனினும் யாழ்.கோட்டையை அண்டிய பகுதியில் பாரிய இராணுவ முகாம் அமைப்பதற்கு விடுதலைப் புலிகளும், பொது அமைப்புக்களும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.இதேவேளை இது விடயம் தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் சந்தித்தனர். இதனையடுத்து முகாம் அமைக்கும் பணியை இடை நிறுத்துவதென பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அறிவித்துள்ளார்.முகாம் அமைக்கும் பணியை பாதுகாப்பு அமைச்சர் இடை நிறுத்தியிருப்பது பாராட்டுதற்குரியது.

ஆனால்,சமாதான முயற்சிகள் நடை பெறும் போது யாழ்.கோட்டைப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியை முன்னெடுத்தமை அரசினதும்,பாதுகாப்புப் படையினதும் பொறுப்பற்ற செயலாகும்.

வடக்குக் கிழக்கு மக்கள் சமாதான முயற்சிகளில் நம்பிக்கை கொண்டிருக்கும் போது அதனைக் குழப்பும் வகையில் இராணுவம் செயற்படுவது அரசின் சமாதான முயற்சியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதாக அமையும்.

அதே சமயம் யாழ்.கோட்டைப் பகுதியில் பாரிய இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியை மேற் கொண்ட அரசு எந்த விதமான திட்டமும் இன்றி செயற்பட்டிருப்

# தேர்தல் அதிகாரியைப் பணயம் வைத்து வாக்குப் பெட்டியைத் தூக்கிச் சென்றனர்

## உடத்தலவின்ன வழக்கில் பொலிஸ் அதிகாரி சாட்சியம்

(கோட்டை)

இராணுவ உடையில் வாக்குச் சாவடிக்குள் புகுந்த ஒருவர் ஒரு தேர்தல் அதிகாரியைப் பிணையாகப் பிடித்துக் கொண்டார் என்று உடத்தலவின்ன படுகொலை வழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் சார்ஜன்ட் உபாலி சந்திர சிறி கூறினார். துப்பாக்கிப் பிரயோகம் செய்ய தாம் ஆயத்தமான போது தனது கழுத்தின் மீது துப்பாக்கியொன்றை வைத்த ஒருவர் தம்மைச் சுட்டுவிடப் போவதாகப் பயமுறுத்தியதாக வும் அவர் மேலும் கூறினார்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் எரிக் பஸ்நாயக்க, தீப்பாலி விஜேசுந்தர மற்றும் சுனில் ராஜபக்ஷ ஆகியவர்கள் முன்னிலையில் ட்ரயல் அட்பார் முறையில் இந்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அவர் மகன்களான லோகான் ரத்தவத்த, சானுக்க ரத்வத்த ஆகியவர்கள் உட்பட 15 பேருக்கு எதிராக உடத்தலவின்னவில் தேர்தல் தினத்தன்று 10 பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக 83 குற்றச் சாட்டுக்களின் மீது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

2001ஆம் ஆண்டு தேர்தலின் போது சாட்சி உடத்தலவின்ன முஸ்லிம் பாடசாலையில் பணியில் ஈடுபட்டிருந்ததாகக் கூறினார். அவர் கூறியதாவது, வத்தேகமப் பிரதேசம் பற்றி எனக்கு நன்கு தெரியும். உடத்தலவின்ன முஸ்லிம் பாடசாலைக் கருகாமையில் உள்ளவர்களின் 80 வீதமானவர்கள் முஸ்லிம்கள். அன்றைய தினம் காலை 7 மணிக்கு நாங்கள் வாக்குச்சாவடியைத் திறந்தோம். மேலும் ஒரு பொலிஸ் அலுவலர் இருந்தார். இரண்டு ரி-56 ரக துப்பாக்கிகளும் இருந்தன. பாதுகாப்புக்காக இந்த ஆயுதங்கள் தரப்பட்டிருந்தன.

ஒரு மணியளவில் நான் வாக்குச் சாவடி அருகில் இருந்தேன். ஒரு துப்பாக்கி வேட்டுக் கேட்டது. தொரகமுவ-உடத்தலவின்ன வீதிப்பக்கமிருந்து அந்தச் சத்தம் கேட்டது. குண்டு வெடிக்கும் சத்தம் ஒன்றையும நான் கேட்டேன். அந்த இடத்திற்குப் போய்நாங்கள் விசாரிக்கவேண்டுமா என்று மற்ற பொலிஸ் அலுவலர் கேட்டார். ஆனால் தேர்தல் சாவடியைப் பாதுகாப்பதே எமக்கிருந்த கடமையென்று நான் கூறினேன். இந்தச்சம்பவம் பற்றி வத்தேகம பொலிஸில் கூறும்படி நான் கிராம நிலதாரியிடம் கூறினேன்.இந்தச் சம்பவத்தையடுத்து தேர்தலில் வாக்களிக்க வந்தவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது.

பின்னர் ஒரு வாகனம் கொளுத்

ளார்கள் உங்களில் எவரையும் விட்டு வைக்க மாட்டோம்" என்று.

சிலர் முகமூடி அணிந்திருந்தார்கள். வாக்குச் சாவடியின் தலைவரை அவர்கள் பயமுறுத்தினார்கள். மற்றப் பொலிஸ் அலுவலர் மீதும் துப்பாக்கியை நீட்டியிருந்தார்கள். ஒரு தேர்தல் அதிகாரியைப் பணயமாக வைத்திருந்தார்கள்.

அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு நான் ஆயத்தமானேன். அப்பொழுது அவர்களில் ஒருவர் என் கழுத்தில் துப்பாக்கியை வைத்து,சுட்டால் என்னை சுட்டு விடுவதாக அவர் அச்சுறுத்தினார்.

றோஸ் நிற ரீசேர்ட் அணிந்திருந்த ஒருவர் வாக்குப் பெட்டியைத் தூக்கிச் சென்றார். கொமாண்டோ உடையிலிருந்தவர்கள் அவருக்கு உதவினார்கள்.

பெட்டியைக் கொண்டு போக வேண்டாம் என்று அவர்களிடம் கூறினேன். அதைக் கச்சேரிக்கு கொண்டு போவதாகவும் கவலைப்பட வேண்டாம் என்றும் கூறினார்கள்.

**வழக்கறிஞர்:** கச்சேரிக்கு அவர்கள் வாக்குப் பெட்டியைக் கொண்டு சென்றது உமக்கு வசதியாகப் போயிருக்குமல்லவா? அவர்களுக்கு நன்றி கூறினீரா?

**சாட்சி:** அவர்களுக்கு நான் என்னவென்று நன்றி கூறமுடியும். நான் ஒரு துரதிர்ஷ்டமான மனிதன் என்று நினைத்துக் கொண்டேன்.

**வழக்கறிஞர்:** ஏன் துரதிர்ஷ்டமான மனிதர் என்று நினைத்தீர்?

**சாட்சி:** ஏனைய எல்லாரும் வாக்குப் பெட்டிகளுடன் வந்திருக்க நான் மட்டும் வாக்குப் பெட்டியில்லாமல் போக வேண்டியிருக்குமே என்பதால் அடுத்த தேர்தல் சாவடியில் இருந்த அதிகாரியும் இதே நிலையைத் தான் தாங்களும் எதிர் கொண்டதாகக் கூறினார். வாக்குச் சீட்டுகள் எண்ணப் படும் இடத்திலிருந்த அதிகாரியிடம் இவை எல்லாவற்றையும் கூறினேன்.

அடையாள அணிவகுப்பின் போது இங்கே நிற்கும் 14வது எதிரியை நான் அடையாளம் காட்டினேன். அவர் தான் துப்பாக்கி காட்டி என்னைப் பயமுறுத்தியவர்.தேர்தல் சமயத்தில் பொறுப்பதிகாரியாய் இருந்தவர் என்னிடம் வந்து குறித்த சம்பவம் பற்றி என்னிடம் கேட்டார். அவரது கை டெலிபோனில் யாரிடமோ பேசினார்.

இந்தக் கட்டத்தில் எதிரிகளின் சட்டத்தரணி குறுக்கிட்டு சாட்சியின் இந்தக் கூற்றை அனுமதிக்கலாகாதென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி சாட்சியாகத் தோன்றமாட்டார் என்றும் கூறினார்.

ஆட்சேபத்தை நீதிபதிகள் நிராகரித்தனர்.

பிரதி சொலிட்டர் ஜெனரல்: அந்த அதிகாரி குறித்த சம்பவத்தின் முன்னர் வந்தாரா அல்லது பின்னர் வந்தாரா?

**சாட்சி:** சம்பவத்தின் பின்னர் சம்பவத்தைப் பற்றிக் கேட்டு விட்டு யாருக்கோ டெலிபோனில் கூப்பிட்டு "சேர் திட்டம் குழம்பி விட்டது எங்கள் ஆட்களை முஸ்லிம்கள் தாக்கியிருக்கிறார்கள். வேறு யாரையும் அனுப்புங்கள்" என்று. அது நடந்த போது 1.30 மணியிருக்கலாம்.

வழக்குத் தொடர்கின்றது. (பி)

# மறைத்து வைக்கப்பட்டிருந்த சிறியரக விமானங்கள் இரண்டை பொலிஸார் கண்டு பிடித்தனர்

(கொழும்பு)

வாதுவைப் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சிறிய ரக விமானம் இரண்டைப் பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

இது தொடர்பாக வாதுவைப் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் அபயவர்த்தனா கருத்து தெரிவிக்கையில்,

கொங்கிறீற்றினால் அமைக்கப்பட்ட ஆழமான பங்கர் ஒன்றில் மேற்படி இரு விமானங்களும் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து கொழும்பு விசேட பொலிஸ் பிரிவிற்கு இது பற்றி தெரிவித்தோம்.

நேற்று முன்தினம் மாலை முதல் அப்பகுதிக்கு தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கு நீதிமன்றம் அனுமதி தந்ததும் இவ்விரு விமானங்களும் வெளியில் எடுக்கப்படும் என்றார்.(உ-10)

## தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் திறப்பு

(தென்மராட்சி)

தேசிய சேமிப்பு வங்கியின் இரு கிளைகள் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப் படவுள்ளன.

மானிப்பாய், திருநெல்வேலி, பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கிளைகளே அன்றைய தினம் தலைவர் டி.எம்.சுவாமிநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளன.

கடந்த 1990ஆம் ஆண்டின் பின்பு இங்கு திறக்கப்படுகின்ற தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்ள்

*இலங்கை அணித் தெரிவில் அரசியல் தலையீடு*

# இலங்கை அணித் தெரிவு குழுத் தலைவர் பதவி துறப்பு

(கொழும்பு)

இலங்கை அணியின் முன்னாள விளையாட்டு வீரரும் தற்போதைய அணித்தெரிவுக் குழுத்தலைவருமான டி.அல்வீஸ் மேற்படி பதவியில இருந்து இராஜினாமாச் செய்துள்ளார். அணித் தெரிவில் அரசியல் வாதிகள் தலையிடுவதே தாம் பதவி விலகக் காரணம் என செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ள இவர், விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோவை கடுமையாக சாடியுள்ளார்.

சார்ஜா சுற்றுப்போட்டிக்காக தெரிவு செய்யப்பட்ட அணியில் இலக்குக்

தல் போன்றவற்றிலும் அமைச்சர் தலையிட்டார். இவர் தலையிடுவதால் எனது நேர்மையான பணியை செவ்வனே செய்ய முடியாது உள்ளது என்று அவர் தனது இராஜினாமாவை நியாயப்படுத்தியுள்ளார்.

மேற்படி அமைச்சர் பதவி ஏற்றபின் இதுவரை மூன்று தெரிவுக் குழுத்தலைவர்கள் இராஜினாமாச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,தற்போது அமைச்சரால் தெரிவுக் குழுத் தலைவராக அரவிந்தடிசில்வாவின் பெயர் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர்டேவ் வட்மோர் தனது ஒப்பந்

அரசு எந்த விதமான திட்டமும் இன்றி செயற்பட்டிருப்பது புலனாகிறது.அதாவது, யாழ்.கோட்டைப் பகுதியில் இராணுவ முகாமையமைப்பதை இடைநிறுத்திய பாதுகாப்பு அமைச்சர் கூடவே ஓர் தகவலையும் வெளியிட்டுள்ளார்.

அதாவது,புதிய இராணுவ முகாம் அமைக்கப்படுவது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துபொருத்தமான இடத்தைத் தெரிவு செய்து கொள்வார் என்பதே பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்த தகவலாகும்.

அவ்வாறாயின் யாழ்.கோட்டைப் பகுதியில் இராணுவ முகாம் அமைப்பதற்கு முன்பதாக, பாதுகாப்பு அமைச்சரின் எந்த அதிகாரிகளும் அது பற்றி ஆராயவில்லை என்பது தெளிவாகிறது.அப்படியாயின் யாழ்.பிரதேசத்தில் எந்த இடத்திலும் இராணுவ முகாமை அமைக்கலாம்.அவ்வாறு அமைக்கப்பட்டாலும் அது பற்றி பரவாயில்லை என்ற நிலைப்பாடே பாதுகாப்பு அமைச்சிடம் உள்ளதெனில் நிலைமை எப்படியுள்ளதென்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

படிப்படியாகக் குறைந்தது.

பின்னர் ஒரு வாகனம் கொளுத்தப்பட்டதாகவும் 7பேர் சுடப்பட்டிருந்ததாகவும் அறிந்தேன். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். தேர்தலுக்குப் பின்னர் முழுதுமாக எரிந்த நிலையில் ஒருவாகனத்தைக் கண்டேன்.

இந்தச்சம்பவத்தையடுத்தும் தொடர்ந்து பிரதான வீதிப்பக்கமிருந்து சூட்டுச்சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன.அந்தச்சத்தங்கள் படிப்படியாக பாடசாலையை அண்மித்து வந்தன. சிறிது நேரத்தில் இராணுவக் கமாண்டோ உடையில் சிலர் வாக்குச்சாவடியை வந்தடைந்தனர். அவர்களில் 15 பேர் வரை இருந்தனர்.

அவர்கள் கூறினார்கள். ''எங்கள பையன்களில் 7 பேர் தாக்கப்பட்டுள்

பின்பு இங்கு திறக்கப்படுகின்ற தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் இவையென்றும் இவை கணனி மயப்படுத்தப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-77,581)

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காணரத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

சார்ஜா சுற்றுப்போட்டிக்காக தெரிவு செய்யப்பட்ட அணியில் இலக்குக் காப்பாளர் சங்ககாரவையும், தோள் மூட்டுவலி காரணமாக முரளிதரனையும் நான் நீக்கி இருந்தேன் ஆயினும் ,விளையாட்டுத்துறை அமைச்சர் தலையிட்டு அவர்களை அணியில் சேர்த்துக் கொண்டார்.

அரவிந்த டீசில்வா தேர்வாளராக தெரிவு செய்யப்பட்டமை அணித் தலைவர் சனத்ஜெயசூரியாவை தொடர்ந்து பதவியில் வைத்திருத்

கிறது இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர்டேவ் வட்மோர் தனது ஒப்பந்தம் எதிர்வரும் மே மாதத்துடன் நிறைவு பெறுவதாகவும் தான் புதுப்பிப்பதற்கு விரும்பவில்லை எனவும் கூறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவங்களால் இலங்கை கிரிகெட் அணியின் எதிர்காலம் குறித்த கவலைகளை கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் வெளியிட்டுள்ளனர். (உ-55)

ௐ

## திசைரி தியானம்

### இறை அன்பு

சோதனைகள் ஓர் உண்மையான பக்தன் இறைவன் பால் வைத்துள்ள நம்பிக்கையைக் கெடுப்பதில்லை.அன்பு அழிக்க முடியாதது. அன்பு தான் மூலாதாரமான உண்மை. இந்த உலகத்தில் அன்புதான் எல்லாவற்றிலும் பெரிய ஆற்றல் உடையது. அது தான் வாழ்க்கையின் அடிப்படை. வாழ்க்கையின் சங்கீதமும் அதுவே. மதத்தின் சாரம் அன்பே. ஓ!அன்புக்குரிய கிருஷ்ணா! உன்னுள் அழியாத ஆத்மா உள்ளது. இதனை உணர்ந்து கொள்வாயாக!

**சுவாமி சிவானந்தர்**

## தவக்கால நற்சிந்தனை

**''உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கிறார்''**

நன்மைகள் செய்து மக்களிடையே பிரபலமானவர்களும் உண்டு. தீமை செய்து மக்களிடையே பிரபலமானவரும் உண்டு. நடைமுறைக்கு அப்பாற்பட்டு வாழும் எவரும் மக்களின் கவனத்தை மிக எளிதில் கவர்ந்து விடுவர். சமூக சேவை என்ற போர்வையில், சமுதாயத்தை சூறையாடும் கொள்ளை நரிகள் நம்மிடையே மலிவாகக் காணக்கிடக்கிறார்கள். அவர்கள் செய்யும் அட்டூழியங்கள் நாள்தோறும் நம் தெருத்திடல்களில் அரங்கேறுகின்றன. எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வரும் இன்றைய உலகம், வாழ்வின் மதிப்பீடுகளையும் அவற்றிற்கு உயிர் தந்து வாழ வைப்பவர்களையும் மிகத் துல்லியமாகத் தான் கருதுகின்றது.''கனி கொண்ட மரம் தான் கல்லெறிபடும்'' என்பதற்கிணங்க ஆண்டவரின் பிள்ளைகளின் செயல்களை எதிர்ப்பவர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறார்கள். தீங்கு செய்யாதீர். நன்மை செய்வீர். நல்லது செய்யாவிட்டாலும் தீயதும் செய்யாதீர். நன்மை செய்பவர்களையும் தடுக்காதீர். ஏனெனில் இவர்களால் தான் இவ்வுலகம் இன்றும் உயிரோடிருக்கின்றது.

**காவலன்**

# உதைபந்தாட்டப் போட்டியில் கைகலப்பு, இளைஞர்காயம்

(யாழ்ப்பாணம்)

உதைபந்தாட்டப் போட்டியைத் தெடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புங்குடு தீவு அணி ஒன்றுக்கும் அல்லைப்பிட்டி அணி ஒன்றுக்கும் இடையில் புங்குடுதீவில் நேற்று மாலை இடம் பெற்ற போட்டியைத் தொடர்ந்தே கைகலப்பு ஏற்பட்டது.

இக் கைகலப்பில் புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தைச் சேர்ந்த குமரன் றமேஸ்வரன்(வயது23) என்பவரே காயமடைந்தவராவர். இவரது உடற்பகுதிகளில் கற்களால் குற்றப்பட்ட காயமும் காணப்படுகிறது.

மேற்படி உதைபந்தாட்டப் போட்டியில் புங்குடுதீவு அணி வெற்றியீட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (த-6)

# ஆஸி. சட்டத்துறை பீடாதிபதி கூட்டமைப்பினருடன் சந்திப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலிய மெல்போன் பல்கலைக்கழக சட்டத்துறை பீடாதிபதி பேராசிரியர் செரில் சோண்டாஸ் மற்றும் சட்டத்துறை ஆலோசகர் டானியல் ஹோலன்ட் ஆகிய இருவரும் நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்றுப் பிற்பகல் 4மணியளவில், கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில், கூட்டமைப்பு பராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இலங்கையின இனப்பிரச்சினைக்குத் தீர்வு விடயங்கள் மற்றும் சமஸ்டி முறைகுறித்து இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் பராளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, இரா.சம்பந்தன், ஜேசப்பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)

# சுகாதார கருத்தரங்கு

(ஆனைக்கோட்டை)

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு சுகாதாரத் திணைக் களத்தின் வலி.தென் மேற்குப் பிரிவினரால் இன்று வெள்ளிக் கிழமை சுகாதார கருத்தரங்கும், விடியோப் படக்காட்சியும் சாவல் கட்டு சனசமூக நிலைய மண்டபத்தில் நடத்தப் படவுள்ளது. (த-201)

# கணனி வழங்கல்

(வல்வெட்டித்துறை)

சிதம்பரக்கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையுடன் இணைந்து கல்லூரியின் லண்டன் வாழ பழயமாணவர்கள் சிதம்பரக் கல்லூரிக்கு ஆறு கணனிகளை அன்பளிப்பு செய்யவுள்ளனர்.

இந் நிகழ்வு இன்று பழைய மாணவர்சங்கத் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து சிவகுரு வித்தியாசாலை, வல்வை மகளிர் வித்தியாலம் என்பனவற்றிக்கும் தலா ஒவ்வொருகணனிகள் அன்பளிப்பு செய்யவுள்ளது. அவற்றினை அந்தந்தப்பாடசாலை அதிபர்கள் பெற்றுக்கொள்வர். (த-63)

# யாழ் மாவட்டத்தில் 33 பேருக்குஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

2000ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீடசைப் புள்ளிகளின் அடிப்படையில் 33 பேருக்கு யாழ்மாவட்டத்தில் ஆசிரியர் நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

யாழ் மார்வட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலையங்களிற்கும் தேவையான வெற்றிடங்களின் அடிப்படையில் இவ்நியமனங்கள வழங்கப்பட்டுள்ளன.

யாழ் கல்வி வலையங்களிற்கு ஐந்துபேர் நியமிக் கப்பட்டுள்ளனர். ஆரம்பக் கல்வி ஒருவர், சித்திரம் ஒருவர், உடற்கல்வி இருவர், கணிதம் ஒருவர்

தீவக வலையத்திற்கு ஆறு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். விஞ்ஞானம் ஒருவர், ஆரம்பக் கல்வி நான்கு பேர், கணிதம் ஒருவர்

தென்மராட்சி கல்வி வலையத்திற்கு ஐந்து பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். கணிதம் ஒருவர், விவசாயம் ஒருவர் ஆரம்பக்கல்வி மூன்று பேர்.

வடமராட்சி கல்வி வலையத திற்கு எட்டுப்போ நியமிக்கப் பட்டுள்ளனர். கணிதம் மூன்று பேர், ஆரம்பக்கல்வி மூன்று பேர், உடற்கல்வி ஒருவர், சித்திரம் ஒருவர்.

வலிகாமம் கல்வி வலையத் திற்கு ஒன்பது பேர் நியமிக்கப் பட்டுள்ளனர். விவசாயம் ஒருவர், நடனம் இருவர், கணிதம் இருவர், சித்திரம் ஒருவர், விஞ்ஞானம் ஒருவர், ஆரம்பக்கல்விஇருவர்.(இ-4)

# நீதிமன்றம் பிடியாணை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம் பதியில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட வரதன் குழுவின் தலைவர் ரஞ்சனின் கொலைக்கு காரணமான துப்பாக்கி நபருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

மேற்படி கொலையை விடுதலைப்புலி உறுப்பினரான சிவகுமாரேசெய்ததாகவும்அவரைத்தனக்குத் தெரியும் எனவும மரண விசாரணையின்போது பொலிசார் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதனை அடுத்து சம்பந்தப் பட்ட நபரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதவான் அப்துல்கபூர் நேற்று உத்தர விட்டார். இதேவேளை மேற்படி கொலைக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

# மறியற் போராட்டம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்களின் மறியற் போராட்டம் நேற்றுடன் தற்காலிகமாக இடை நிறுத்தப் பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக நிரந்தர நியமனம் கோரி தொண்டர் மறியற் போராட்டம் இடம் பெறறது. எனினும் நேயாளர்களின் நலன் கருதி போராட்டத்தை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளதாக யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்சங்கம் அறிவித்துள்ளது. (இ)

## சீனப்படகு..

தொடர்பாகவும் யுத்த நிறுத்தக் கண் காணிப்புக் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.அந்த அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

போர் நிறுத்த உடன்பாட்டையும், அமைதிச் சூழலையும் எதிர்காலத்தில் பாதிக்கக் கூடிய விதத்தில் இத்தகைய சம்பவங்கள் கடலில் ஏற்படாது இரு தரப்பினரும் பார்த்துக் கொள்ள வேண்டும் என யப்பான் பேச்சுக்களின் போது உடன் பாடு காணப் பட்டது.இது தொடர் பான திட்டங்களை கண்காணிப்புக் குழு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சில நாட்களில் வழங்கவுள்ளது.

## வரதனின்...

போட்டு எரிக்கும் நடவடிக்கையில் வரதன் குழு உறுப்பினர்கள் ஈடுபட்டிருந்த தாகவும், காலை 7மணியளவில் அங்கு வந்த பொலிஸார் வீதித் தடைகளை அகற்றி போக்குவரத தைச்சீர் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேலதிக பொலிஸார் அங்கு பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்தனர். (த)

இவ் விடயம் தொடர்பாக இம் மாதம் 24ம் திகதி இரு தரப்புப் பிரதி நிதிகளும் நோர்வே அரச பிரதி நிதிகளும் கலந்து கொள்ளவுள்ள கூட்டத்தல் கடல்விடயம் தொடர்பான உடன்பாடு ஒன்றை மையமாக வைத்துத் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (வ)

## பிரதமர்...

ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இப் பாராளுமன்றக் குழுவினர் நேற்றுப் பிற்பகல் 2மணிக்கு தொண்டர் ஆசிரியர் விவகாரம் தொடர்பாக கல்வி அமைச்சர் கருணா சேன கொடித்துவக்குவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பில் இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மகாசிவமும் கலந்து கொண்டார். (இ-43)

## அரசு-புலிகள்...

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது பாதுகாப்பு வலயம், உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி மக்களை அங்கு மீளக் குடியமர விடாமல் அவர்களது இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய வகையில் ஏற்கனவேகண்ட உடன்பாடுகளுக்கு மாறாக நடந்து கொள்வது நெருக்கடியான சூழலை ஏற்படுத்துவதாக உள்ளது என்றும் சுட்டிக் காட்டியதாக தெரிவித்தார்.

நேற்றுக்காலை நடைபெற்ற இச் சந்திப்பில் புலிகளின் சார்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மற்றும் ஜோர்ஜ் ஆகியோரும் சமாதான நோபல் பரிசு பெற்ற யோன் கியூவுடன் பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் இவான்,ஐரிஸ் உயர் ஆணையாளர் பிலிப்மைக்கடானர், தெற்காசியப் பிராந்திய அலுவலக லண்டன் பொதுநலவாய பிரதித்தலைவர் யேம்ஸ் டொறிவ் ஆகியோரும் கலந்து கொண்டனர் (வ)

## ஈராக்....

# காப்பரண்கள் புனரமைப்பு

(குருநகர்)

யாழ்ப்பாணம் கொட்டடியில் இருந்து நாவாந்துறை, பொம்மை வெளி, காக்கைதீவு வரையான கரையோரப் பகுதியிலுள்ள படையினரின் காப்பரண்கள் துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகின்றன.

நூறு மீற்றருக்கு ஒவ்வென்றாக அமைக்கப் பட்டுள்ள மேற்படி காவலரண்கள் தென்னை ஓலைகளால் உருமறைக் கப்பட்டு கூரையும் அமைகப்பட்டு வருகின்றன.

வீதியோரங்களில் வளர்ந்து இருந்த எருக்கலை மற்றும் செடிகொடிகள் அனைத்தும் படையினரால் துப்புரவு செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடதக்கது. (த-74)

# வானியல் பாசறை

(கொழும்புத்துறை)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று இரவு மாணவர்களுக்கான வானியல் பாசறை நிகழ்வு இடம் பெறவுள்ளது. (த-51)

# நினைவஞ்சலி




உ

ஸ்ரீ கணபதி துணை.





ஸ்ரீ கணபதி துணை



திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் கலி (சித்) யுக சித்திரபானு வருட (5104) பங்குனித் திங்கள் 22ம் நாள் அதாவது நாளை (05-04-2003) சனிக்கிழமை [illegible] முகூர்த்தமான நண்பகல் 12.00 மணியளவில் "Z to Infinity IT Academy" என்னும் கணினிக் கல்விக் கூடமும் "SRI SAKKARAH Computer Eye" என்ற Computer Complex உடன் எனது பெற்றோர்களான திரு. திருமதி பூ. தியாகராஜா அவர்களினால் மங்களகரமாகத் திறந்து வைப்பதற்கு திருவுளம் கைகூடியுள்ளது. அத்தருணம் பெரியோர்கள், அன்பர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரும் வருகை தந்து விழாவின் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

Your's

T. SATHIENTHIRA (KANNAN)
Proprietor
SRI SAKKARAH Computer Eye
and
Z to Infinity I.T Academy

Mobile:- 0777-141945
e-mail:-
tsathiyendra@yahoo.com
and
zia2631@hotmail.com

No. 7¼, 7½, Upstairs Modern Market Palaly Road
Thirunelvely Junction Jaffna.

பொதுநலவாய பிரதித்தலைவர் யேம்ஸ் டொறிவ் ஆகியோரும் கலந்து கொண்டனர் (வ)

## ஈராக்....

அமெரிக்க கூட்டுப்படையினை எதிர்த்துப் போராடவருமாறு சதாம் ஹுசையின் ஒலிப்பதிவு நடாமூலம் ஈராக்கிய மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான போர் விமானம் இரண்டு ஈராக்கியப் படையினரின் போர்ச்சாட் எவுகணையினால் ஹர்பாலா நகரில் சுட்டுவீழ்த்தப்பட்டது தொடர்பாக முழு அளவிலான விசாரணை ஒன்றை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க அமெரிக்கா கூட்டுப்படையினரின் குண்டுவீச்சு விமானங்களின் லேசர் குண்டு வீச்சினால் சதாம் ஹுசைனின் மாளிகையும் தகவல் தொடர்பு அமைச்சகமும் தாக்கி அழிக்கப்பட்டுள்ள நிலையில் சதாம் தற்போது உயிருடன் இருக்கிறாரா? என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில் நேற்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் இராஜாங்கச் செயலாளர் பேளின் பவல் ஐரோப்பிய யூனியனின் வெளி நாட்டு அமைச்சரைச் சந்தித்து யுத்தத்தின் பின்னர் ஈராக்கை கட்டியெழுப்புவது தொடர்பாகவும் இடைக்கால அரசு அமைப்பது தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

இரவு மாணவர்களுக்கான வானியல் பாசறை நிகழ்வு இடம் பெறவுள்ளது. (த-51)

## நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் வித்துவான் முருகேசு விருத்தாசலத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பி.ப. 1மணிக்கு சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் பிரதான மண்டபத்தில் ந.பாலசந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த)

## யாழ்நகரஅபிவிருத்திக் கலந்துரையாடல்

(திருநெல்வேலி)

யாழ்நகரஅபிவிருத்தியை திட்டமிட்ட முறையில் மேற்கொள்வது எவ்வாறு என்பது குறித்தகலந்துரையாடலொன்று நேற்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

மேலதிக அரசங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் இடம்பெற்ற இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தில் கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ் தர்மஸ்ரீ மற்றும் கொழும்பிலிருந்து வருகைதந்த உயரதிகாரிகளும் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளைபொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.(உ-4377)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.